# மலர்ந்த ஜீவியம்

## ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்

நவம்பர் 2007 ஜீவியம் 13 மலர் 7

*இம்மாத மலரில். . . .*

பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| **இம்மாதச் செய்தி** | 2 |
| **லைப் டிவைன் - கருத்து** | 3 |
| **நம்பிக்கை** | 5 |
| **அன்பர் கடிதம்** | 19 |
| **உயிரோடுள்ள உணர்வு** | 21 |
| **இன்றைய தேசபக்தி** | 25 |
| **சாவித்ரி** | 28 |
| **லைப் டிவைன்** | 30 |
| **ஆன்மீகம் மற்றும் மனோதத்துவ உண்மைகள்** | 36 |
| **மலரும் மணமும்** | 39 |
| **யோக வாழ்க்கை விளக்கம் V** | 49 |
| **யோக சக்தி வாழ்வில் பலிக்கும் முறைகள்** | 53 |


❀❀❀

**கதை, கட்டுரைகளில் வரும் பெயர்கள் யாரையும் குறிப்பிடுவன அல்ல.**
**வருடச் சந்தா ரூ.60/-**
**தனிப் பிரதி ரூ.5/-**

## ஜீவியத்தின் ஓசை

✡ **பல விஷயங்களுக்காக அடுத்தவரை அறிவுரை கேட்கலாம்.**

**அடுத்தவரை அறிவுரை கேட்கமுடியாத விஷயங்கள் உள்ளன.**

**அத்தகைய நேரந்தான் அன்னையை அணுக உசித- மான நேரமென்று நமக்குத் தோன்றுவதில்லை.**

✡ **சேவை என்பது நமக்குக் கிடைப்பதைவிட அதிகமாக நாம் செய்வதிலிருந்து எழுகிறது.**

**நல்லெண்ணம் அதிகமாக இருப்பவர்களாலேயே சேவை செய்ய முடியும்.**

# இம்மாதச் செய்தி

**சொல் செயலின் பண்பு நயத்தால்**

**மனத்தில் பக்குவமாகப்**

**பரிமளிக்கிறது.**



"Life Divine" – கருத்து

**லோகம் மாறினால் காலம் மாறும்.**
**மனம் தூரத்திலுள்ளவரை அசைக்கும்.**

✡ **ஆர்வமான நேரம், பல மணி நேரம் சில நிமிஷங்களாகப் பறக்கும்.**

✡ **ஆபத்தான நேரத்தில் நிமிஷம் யுகமாக நகரும்.**

**இந்த அனுபவங்களுக்கு *The Life Divine* தத்துவ விளக்கம் தருகிறது.**

✡ ***காலம் என்பது நிலையானதன்று. உடலுக்குரிய காலம், மனத்திற்குரிய காலம், ஆத்மாவுக்குரிய காலம் என வேறுபடும்.***

✡ **வீடு கட்டுவது போன்ற செயல்கட்கு அந்தஸ்தைப் பொருத்து காலம் சுருங்கும்.**

**வசதியற்றவன் நெடுநாளிலும், வசதியானவன் உடனேயும் கட்டிவிடுவான்.**

**Promotion பதவி உயர்வு என்பது சர்க்காரில் சீனியாரிட்டியைப் பொருத்து மெதுவாகச் சட்டப்படி நகரும்.**

**தனியார் கம்பனியில் திறமையைப் பொருத்து வேகமாக வரும்.**

**அரசியலில் சந்தர்ப்பங்கள் மாறினால் MLA மந்திரியாவான். நேரம் தேவை இல்லை.**

**வீடு கட்டுவதும், பிரமோஷன் பெறுவதும் இந்த உதாரணங்களில் காரணம் புரிகிறது.**

**காலம் மாறுவதற்குத் தத்துவம் காரணம் கூறுகிறது.**

**உடலின் காலம் மெதுவாகவும், மனத்தின் காலம் வேகமாகவும் – மனோ வேகம் – நகரும்.**

**மனத்தின் பின்னால் செல்ல முடியுமானால்**
**ஜடத்தின் பின்னாலுள்ள இடம் தெரியும்.**
**அங்கிருந்து மனம் குரல் எழுப்பினால்**
**தூரத்திலுள்ள பொருள் அசையும்.**

✡ **ஆத்மா தன் அசைவைக் காண்பது காலம் என்பது தத்துவ விளக்கம்.**

**மனிதன் தன் மனத்தின் அசைவைக் காண்பது எண்ணம் அல்லது கற்பனை.**

***மனிதனுக்கு மனம் செயல்படுவதுபோல் சத்புருஷனுக்கு ஆத்மா செயல்படுகிறது.***

**மனிதன் உள்ளே போய் மனத்தைக் காண்பது எண்ணம் உற்பத்தியாவது. அதேபோல் புருஷன் உள்ளே போய் ஆத்ம சலனத்தையறிவது காலம்.**

**எனவே *காலம் என்பது ஆத்மாவின் எண்ணம் எனலாம்.***

**காலம் ஆத்மாவின் எண்ணம் என்பதால், தூரத்திலுள்ள பொருளையோ, மனிதனையோ ஆத்மாவால் அசைக்க முடியும்.**

**மனிதன் ஆத்மாவானால் தூரத்திலுள்ளவற்றை ஆளமுடியும்.**

❀❀❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

நமக்கு எதைச் செய்ய முனைப்பிருக்கிறதோ, அது தேவை இல்லாத சின்ன விஷயம். நம்மையறியாமல், நம்மை மீறிய நிலையில் எதைச் செய்வதற்கு உள்ளிருந்து உந்துதல் இருக்கிறதோ, அது பெரிய தெய்வ காரியம்.

***சிறிய விஷயத்திற்கு முனைப்பு; பெரியதற்கு உள் உந்துதல்.***



# நம்பிக்கை

N. அசோகன்

இன்றைய விஞ்ஞான உலகில் இறை நம்பிக்கை என்பது தேவை இல்லாத ஒன்று என்ற ஒரு கருத்து விஞ்ஞானிகளிடையே அதிகம் பரவி இருக்கிறது. விஞ்ஞானிகள் மற்றும் பகுத்தறிவாளர்களின் பேச்சைக் கேட்டுப் பொதுமக்களும் நிறைய பாதிக்கப்பட்டுள்ளனர். விஞ்ஞானிகள் குறிப்பாக மூடநம்பிக்கைகளைத் தாக்குகிறார்கள். ஐரோப்பாவில் வானஇயல் நிபுணர் கோப்பர் நிகேஸ் மற்றும் கலிலியோ என்ற இரு விஞ்ஞானிகளும் சூரியன் பூமியைச் சுற்றி வருகிறது என்ற மூடநம்பிக்கையை 16ஆம் நூற்றாண்டில் தகர்த்து எறிந்தார்கள். அன்றிலிருந்து மூடநம்பிக்கைகளின்மேல் விஞ்ஞானத்தின் தாக்குதல் தொடர்ந்து நடக்கிறது. 19ஆம் நூற்றாண்டில் சார்லஸ் டார்வின் என்ற ஆங்கில விஞ்ஞானி மனிதன் குரங்கிலிருந்து பரிணாம ரீதியாகத் தோன்றியவன் என்று ஆதாரங்களுடன் நிரூபித்தார். இந்த நிரூபணம் மனிதனைக் கடவுள் படைத்தார் என்ற பைபிள் கதையை பொய்யாக்கியதால் கத்தோலிக்க மடத்திற்கு இது ஒரு பெரிய அடியாக வீழ்ந்தது. இப்படி மூடநம்பிக்கைகளைத் தகர்த்து எறிந்தது விஞ்ஞானம் உலகத்திற்குச் செய்த பெரிய சேவை என்று எடுத்துக்கொண்டாலும் இறை நம்பிக்கை நமக்கு இன்னமும் அவசியமாகத்தான் இருக்கிறது. மூடநம்பிக்கைகளை உடைத்தெறிந்ததைப்போல் இறை நம்பிக்கையைத் தாக்குவது சரியில்லை.

ஆன்மீக விஷயங்களில் நம்பிக்கை ஒரு பெரிய இடத்தை வகிக்கிறது. விஞ்ஞானத்திற்குப் பரிசோதனை எவ்வளவு முக்கியமோ அந்தளவிற்கு ஆன்மீகத்திற்கு நம்பிக்கை முக்கியம். விஞ்ஞானி தம்முடைய பரிசோதனையில் கிடைக்கின்ற தகவல்களையும், புள்ளி விவரங்களையும் எந்த அளவிற்கு நம்புகிறாரோ அதே அளவிற்கு ஆன்மீகவாதி தன்னுடைய

ஆன்மீக முயற்சிகள் வெற்றி அடைவதற்கு இறையருள் உதவும் என்று திடமாக நம்புகிறார். ஆகவே இரண்டு பேரும் நம்பிக்கையை வைத்துதான் செயல்படுகின்றனர். முறைதான் வேறேயொழிய, சாதனம் ஒன்றுதான். ஆன்மீகத்திற்கு மட்டும்தான் நம்பிக்கை அவசியம் என்றில்லை, நம்முடைய அன்றாட வாழ்க்கைகூட நம்பிக்கைகளில்தான் ஓடுகிறது. இந்த இடங்களில் உள்ள நம்பிக்கையை நாம் எடுத்துவிட்டால் நம் அன்றாட வாழ்க்கைகூட ஸ்தம்பித்துப் போய்விடும்.

நம்முடைய அன்றாட வாழ்க்கையில் நம்பிக்கை நமக்கு ஏன் தேவைப்படுகிறதென்றால் நம் வாழ்க்கையில் எல்லா அம்சங்களும் நம்முடைய கட்டுப்பாட்டில் இல்லை. ஆகவே நம் கட்டுப்பாட்டில் இல்லாத இடங்களில் நாம் மற்றவரை நம்பிச் செயல்படுவதைத் தவிர வேறு வழி இல்லை. நாம் நம்மை மட்டும்தான் நம்புகிறோம் என்றால், நம்முடைய சாப்பாட்டை நாமே சமையல் பண்ணிக்கொள்ள வேண்டும். எங்கே செல்ல விரும்பினாலும் நாமே வண்டியை ஓட்டிக்கொண்டு செல்ல வேண்டும். நம்முடைய ஷாப்பிங் வேலையையும் நாமே பார்த்துக்கொள்ள வேண்டும். ஆனால் உண்மையில் நாம் என்ன செய்கிறோம். ஹோட்டல்களில் மற்றவர்கள் சமைத்த உணவைச் சாப்பிடுகிறோம். முன்பின் தெரியாத ஓட்டுநர் ஓட்டும் பேருந்து, ரயில் மற்றும் விமானத்தில் பயணம் செய்கிறோம். கம்பனி வைத்திருந்தால் நம்முடைய கம்பனி பணத்தை வங்கியில் கொண்டு போய் டெபாசிட் செய்வது, எடுத்துவருவது என்ற வேலைகளை மற்றவர்களுக்கும் கொடுக்கிறோம். இதிலிருந்து தேவைப்படுகின்ற இடங்களில் நாம் மற்றவரை நம்புகின்றோம் என்று தெரிகிறது. ஆனால் அடுத்தவர்களை நம்ப முடியவில்லை என்ற நிலைமையில் நாம் இருந்தால், வெளியூருக்குப் பிரயாணம் செய்ய முடியாது; வெளியூர் ஹோட்டல்களில் சாப்பிட முடியாது; நம் பணத்தை அடுத்தவரிடம் ஒப்படைக்க முடியாது. சொந்தமாகக் கார் வைத்திருந்து நமக்கே ஓட்டத் தெரிந்தால்தான் நாம் வெளியூருக்கே செல்ல முடியும். நம் உடம்புக்கு வந்துவிட்டால், டாக்டர் குணப்படுத்துவார் என்ற நம்பிக்கை நமக்கு இல்லாவிட்டால் சிகிச்சைக்காக அவரிடம்கூடச் செல்ல முடியாது. கோர்ட், கேஸ் என்று வந்துவிட்டால், வக்கீல்மேல் நம்பிக்கை இல்லாவிட்டால், நம்முடைய கேஸை நாமே வாதாட



வேண்டும். கோடிக்கணக்கான மக்கள் தம்முடைய சேமிப்புகளை வங்கிகளில் போடுகிறார்கள் என்றால், தம்முடைய பணம் பத்திரமாக இருக்கும் என்ற நம்பிக்கை இருப்பதால்தான் வங்கிகளில் போடுகிறார்கள். இந்தியாவில் எண்ணற்ற இளைஞர்களும், இளம் பெண்களும் தம் பெற்றோர் தமக்காகப் பார்த்துவைத்திருக்கும் முன்பின் தெரியாத வரனைத் திருமணம் செய்து கொள்வதைப் பார்க்கும்பொழுது, தமக்கு ஒரு நல்ல வாழ்க்கை தம்முடைய பெற்றோர்கள் அமைத்துக் கொடுப்பார்கள் என்ற நம்பிக்கையின்பேரில்தான் திருமணத்திற்கு ஒத்துக்கொள்வதாகத் தெரிகிறது.

இன்று நம்முடைய வாழ்க்கையில் பணம் மிகவும் அவசியமான ஒன்றாகி விட்டது. இன்று புழக்கத்திலிருக்கும் பணத்தையெல்லாம் எடுத்துவிட்டால் நம்முடைய பொருளாதார வாழ்க்கையே ஸ்தம்பித்துவிடும். பணத்தினுடைய சக்தி எங்கிருந்து வருகிறது என்று புரியும். பணத்திற்கு இவ்வளவு மதிப்பு வருவதற்குக் காரணமே நாம் ஒருவர்மேல் ஒருவர் வைத்திருக்கின்ற நம்பிக்கைதான். இதில் நாம் பணம் என்று சொல்வது உண்மையில் வெறும் பேப்பர்தான். அரசாங்கம் அதை அச்சடித்து, ‘இது பணம்’ என்று சொல்வதால் அதை நாம் பணம் என்று ஏற்கிறோம். தங்கத்திற்கும், வெள்ளிக்கும் இயற்கையிலேயே ஏதோ ஒரு மதிப்பு இருக்கிறது. ‘பளபள’ என்று ஜொலிப்பதால், அந்த ஜொலிப்பை வைத்து அதற்கு ஒரு மதிப்பை வைத்து, அதைப் பணமாக ஏற்றுக்கொள்ள மனம் முன்வருகிறது. ஆனால் இவ்வளவு சுலபமாக, பேப்பர் கரன்ஸிக்கு நாம் மதிப்பை வழங்கிட முடியாது. முதலில், அரசாங்கம் பேப்பர் கரன்ஸியைப் பணம் என்று சொல்வதை நாம் ஏற்க வேண்டும். இரண்டாவதாக, சமூகத்தில் எல்லோரும் பேப்பர் கரன்ஸியைப் பொருளாதார மதிப்பின் சின்னமாக ஏற்றுக்கொள்ள வேண்டும். அடுத்தவர் கொடுக்கின்ற பணத்தை நாம் ஏன் வாங்கிக்கொள்கிறோம் என்று பார்த்தால், அந்தப் பணத்தை மற்றவருக்குக் கொடுத்தால் அவர் அதை வாங்கிக்கொண்டு நமக்கு வேண்டியதைத் தருவார் என்ற நம்பிக்கை இருப்பதால்தான் நாம் அந்தப் பணத்தையே வாங்கிக்கொள்கிறோம். அடுத்தவர் இதைப் பணமாக வாங்கிக்கொள்ள மாட்டார்என்று நாம் நினைத்தால், நம்முடைய பொருளை நாம் யாருக்குமே கொடுத்துப் பதிலுக்குப் பணத்தை வாங்கவேமாட்டோம். ஏனென்றால்

அந்தப் பணம் செல்லும் என்ற நம்பிக்கையே போய்விட்டது.

நம்முடைய அன்றாட வாழ்க்கைச் செயல்பாடுகளே நம் உடம்பின்மேல் நாம் வைத்திருக்கும் நம்பிக்கையைப் பொருத்துதான் நடக்கிறது. நாம் சாப்பிடும்பொழுது நம்முடைய வயிறு நாம் சாப்பிடும் சாப்பாட்டை முறையாக ஜீரணம் செய்யும் என்ற நம்பிக்கை இருப்பதால்தான் நாம் சாப்பிடுகிறோம். நாம் ஒரு கடுமையான வேலை செய்கிறோம்; அல்லது கடுமையான உடற்பயிற்சி செய்கிறோம் என்றால், அதற்கேற்ற எனர்ஜியை நம்முடைய இதயமும், நுரையீரலும் இரத்த ஓட்டத்தையும், சுவாசிப்பையும் உயர்த்தி அதன்மூலம் வழங்கும் என்ற நம்பிக்கை இருப்பதால்தான் நாம் அந்த வேலையிலேயே ஈடுபடுகிறோம். B.P. மற்றும் ஆஸ்துமா உள்ளவர்களுக்கு தங்கள் இதயமோ, நுரையீரலோ அதிக எனர்ஜியை வழங்கி ஒத்துழைக்கும் என்ற நம்பிக்கை இருப்பதில்லை. இந்த நம்பிக்கை இல்லாதபட்சத்தில் அவர்கள் கடுமையான வேலையோ, உடற்பயிற்சியோ செய்ய முன்வருவது இல்லை. ஒரு பெண் கர்ப்பம் அடையும்பொழுது அவளுடைய உடம்பு அந்த கர்ப்பத்தை முறையாகத் தாங்கி குழந்தையைப் பெற்றுத்தரும் என்று அவள் நம்புகின்றாள். உடல் பலஹீனமான இடத்தில் அந்தப் பெண்ணுக்கு நம்பிக்கை இல்லையென்றால், கர்ப்பம் தரிக்க ஒரு பக்கம் ஆசை இருந்தாலும் பயம் காரணமாக ஒரு பக்கம் பின்வாங்கவும் நேரிடலாம். முதல் கர்ப்பம் நிற்காமல் miscarriageஆன பெண்களை எடுத்துக் கொண்டால், நான் சொல்வது புரியும். அடுத்த முறை கர்ப்பம் தரிக்கும் பொழுது இதுவும் நிற்காமல் போய்விடுமோஎன்று அவர்களுக்கு வருகின்ற கவலையை நாம் பார்க்கும்பொழுது, நம்பிக்கை மனிதனுக்கு எந்த அளவு உதவுகின்றதுஎன்று புரியும். சைவ சாப்பாடு சாப்பிடுகிறவர்கள் வெளிநாடு செல்லும்பொழுது அசைவ சாப்பாடு சாப்பிட்டால் தம் வயிறு ஜீரணம் செய்யுமோ, செய்யாதோஎன்று பயம் வந்து, தாம் விரும்பிய சைவ சாப்பாட்டைத் தயார் செய்துகொள்வதற்கு மிகுந்த சிரமம் எடுப்பதைப் பார்க்கலாம். சாதாரண, அன்றாடச் செயல்பாடுகளுக்கே இவ்வளவு நம்பிக்கை தேவைப்படுகிறது என்றால், புதுமையான, creativeஆன வேலை செய்வதற்கு எவ்வளவு நம்பிக்கை தேவைப்படும்என்று எண்ணிப்பார்க்க வேண்டும். எல்லா creativeஆன வேலைகளிலும், இதற்குமுன் பரிச்சயம்



இல்லாத இடங்களிலும் ஆராய்ச்சி செய்யவேண்டி இருக்கும். கண்டுபிடிப்பாளர்கள் தங்களுடைய முயற்சி எப்பொழுது, எப்படி வெற்றி பெறும்என்று தெரியாமலேயே தங்கள் வேலைகளைச் செய்துகொண்டு இருப்பார்கள். ஐந்தாறு நூற்றாண்டுகளுக்கு முன்பு இந்தியாவிற்குச் செல்வதற்கு மேற்குத் திசையில் வழி கண்டுபிடிக்க வேண்டுமென்று கப்பலில் கிளம்பிய ஆராய்ச்சியாளர்கள் எல்லாம் ஏதோ ஒரு நம்பிக்கையின் பேரில்தான் பயணத்தைத் தொடர்ந்தார்கள். தாங்கள் சரியான பாதையில் தான் செல்கிறோமா, இந்தியா கண்ணுக்குத் தென்படுமா, உயிருடன் திரும்பி வரமுடியுமா என்பனவெல்லாம் தெரியாத நிலையில், தொடர்ந்து முயன்றால் வெற்றி கிடைக்கும் என்ற நம்பிக்கை இருந்ததால்தான் பயணத்தைத் தொடர்ந்தார்கள். வடதுருவம் மற்றும் தென்துருவத்தைத் தேடிச் சென்ற ஆராய்ச்சியாளர்கள் நம்பிக்கையில்லாமல் சென்றிருந்தால் எதையுமே சாதித்திருக்க முடியாது. இடையில் வந்த சிரமங்களால் மனமுடைந்து பாதியிலேயே திரும்பி இருப்பார்கள். எப்படியும் வெற்றி கிடைக்கும் என்ற நம்பிக்கை இருந்ததால்தான் கடும்குளிர், புயல், காற்று, பட்டினி, உடல்நலக்குறைவு, இருட்டு போன்ற எண்ணற்ற இடையூறுகளைத் தாண்டிச் சென்றிருக்கிறார்கள்.

போர்க்காலத்தில் நம்பிக்கை இன்னும் அதிகமாகத் தேவைப்படுகிறது. ஏனென்றால் எதிரி நம்மைவிடப் பல மடங்கு பெரிய படையுடன் வரலாம். அப்பட்சத்தில் நம்மைவிடப் பெரிய படையை முறியடிக்கக்கூடிய தைரியம் நமக்கு வரவேண்டுமென்றால் நமக்கு நம்பிக்கை இருந்தால்தான் தைரியம் வரும். இரண்டாம் உலகப்போர் சமயத்தில் ஜெர்மானிய விமானத் தாக்குதலில் இருந்து இங்கிலாந்து நாட்டை சர்ச்சில் காப்பாற்றியது இதற்கு ஒரு நல்ல உதாரணம். ஜெர்மானிய விமானப் படையையும், இங்கிலாந்தின் விமானப் படையையும் ஒப்பிடும்பொழுது, ஐந்துக்கு ஒன்று என்ற விகிதத்தில் இருந்தது. ஐரோப்பாவில் உள்ள மற்ற அனைத்து நாடுகளும் ஜெர்மனிக்கு சரண் அடைந்திருந்தனர். உடனடி உதவி எதுவும் கிடைக்காதுஎன்ற நிலையில், இங்கிலாந்து மட்டும் தனித்து ஹிட்லரை எதிர்க்கத் துணிந்தது. சர்ச்சில் தமக்கிருந்த அபார நம்பிக்கையை ஆங்கிலேய மக்களுக்கும் வழங்கி, ஜெர்மானியப் படையெடுப்பை முறியடிக்க அவர்களையும் ஊக்கப்

படுத்தினார். இறுதியில் ஜெர்மானிய விமானப் படைதான் பின்வாங்கியது. ஒரு தனி மனிதனுடைய தன்னம்பிக்கைக்குமுன் ஒரு படையே பின் வாங்குகிறதுஎன்றால், நம்பிக்கையினுடைய பலம் என்ன என்பதை நாம் உணரலாம்.

இலட்சியச் சேவை மற்றும் புரட்சிகரமான வேலை என்று வரும்பொழுது, தன்னுடைய இலட்சியத்தின்மேல் அபார நம்பிக்கையில்லாமல் அதைச் செய்வது கடினம். மகாத்மா காந்தி அவர்கள் அஹிம்சை மற்றும் சத்தியாகிரகத்தின்மூலம் இந்தியாவிற்குச் சுதந்திரம் வாங்கித் தருவேன் என்று அறிவித்தபொழுது, இவற்றின்மூலம் ஆங்கிலேயரை இந்தியாவை விட்டு வெளியேற்ற முடியுமாஎன்று பெரும்பான்மையான மக்கள் சந்தேகப் பட்டனர். ஆனால் மக்களுடைய சந்தேகம் அவருடைய நம்பிக்கையைக் குறைக்கவில்லை. அவர் தம்முடைய சத்தியாகிரகப் போராட்டத்தைத் துவக்கினார். பல தடவை சிறைவாசம் அனுபவித்த பின்னர், இறுதியாகத் தம்இலட்சியம் வெற்றிகரமாகப் பலித்ததைக் கண்டார். அவரைவிட மனோதிடம் குறைந்த எவராக இருந்தாலும், ஒன்று வன்முறைக்கு மாறி இருப்பார்கள், அல்லது அரசியலைவிட்டு விலகி இருப்பார்கள்.

ஆன்மீகமான இலட்சியமாக இருந்தால், நம்பிக்கை இன்னும் பல மடங்கு உயர்ந்ததாக இருக்க வேண்டும். 1914ஆம் ஆண்டு பகவானை புதுவையில் அன்னை சந்தித்தபொழுது, “எண்ணற்ற மக்கள் அறியாமையில் மூழ்கி இருந்தாலும் பகவான் ஒருவர் பூமியில் இருந்தால் போதும், உலகம் இருளின் பிடியில் இருந்து நிச்சயமாக வெளிவரும்” என்று எழுதினார். இந்த முழுஉலகமே சத்தியஜீவியத்தின் வருகையைப் பற்றி அறியாமல் இருந்தாலும், பகவான் ஒருவருக்காக சத்தியஜீவியம் வரும்என்று அன்னை எழுதுகிறார்என்றால், பகவான்மேல் அவர் எவ்வளவு நம்பிக்கை வைத்து இருந்திருப்பார்என்று நாம் உணர வேண்டும்.

ஆன்மீகத் துறை கண்ணுக்குத் தெரியாத துறையாக இருப்பதால் நம்பிக்கை மிகவும் அவசியமாகிறது. கண்ணுக்குத் தெரியாத ஒரு துறையில் முன்னேற வேண்டுமென்றால் நம்பிக்கை இல்லாமல் முடியாது. நாம் காணுகின்ற ஜட உலகு நம் கண்ணுக்குத் தெரிந்த பொருட்களால்



நிறைந்தது. ஆகையால் இவ்வுலகை நாம் அறிவால் புரிந்துகொண்டு செயல்படலாம். ஆன்மீகம்என்பது சூட்சும உலகத்தைச் சார்ந்தது. சூட்சும உலகமோ கண்ணுக்குத் தெரியாது. ஆகவே நாம் அதை அறிவால் புரிந்துகொள்ள முடியாது. ஒரு நம்பிக்கையின்பேரில்தான் அந்த ஆன்மீகத் துறையில் நாம் செயல்பட முடியும். ஆன்மீகத்தில் நம்பிக்கைஎன்றால் என்னஎன்று வரையறுக்கப்பட்டுள்ளது. ஆன்மாவிற்கு உண்மைஎன தெரிந்தது அறிவு நிலையில் நம்பிக்கையாக மாறுகிறது. மனித மனம் அறியாமையில் இருப்பதால் ஆன்மா தன்னுடைய ஞானத்தை அறிவுக்கு நேரிடையாக வழங்க முடியாது. ஆகவே புரியாத விஷயங்களை அறிவு அப்படியே நம்பிச் செயல்பட்டால் போதும் என்றாகிறது.

ஆன்மீகத் துறையில் ஆன்மீக முன்னேற்றத்தை மட்டும் குறிக்கோளாகக் கொண்டவர்களும் உள்ளார்கள். இறையருளால் வாழ்க்கையிலுள்ள பிரச்சினைகள் தீர்ந்தால்போதும்என்று பிரார்த்தனை செய்கின்ற சாதாரண அன்பர்களும் இருக்கின்றார்கள். ஆன்மாவைக் கண்டுபிடிக்க முயலும் சாதகனாக இருந்தாலும் சரி, அல்லது ஐஸ்வரியத்தைத் தேடும் அன்பனாக இருந்தாலும் சரி, இருவருக்கும் அவரவர் நிலையில் அசைக்க முடியாத நம்பிக்கை வேண்டும். தன்னுடைய அகந்தையை வென்று, ஆன்மாவை நெருங்க முடியுமாஎன்று எழுகின்ற சந்தேகங்களை முறியடிக்க சாதகனுக்கு நம்பிக்கை வேண்டும். சூழ்நிலையில் உள்ள இடர்ப்பாடுகளையெல்லாம் முறியடித்து அருள் தான் விரும்பிய வருமானத்தைக் கொடுக்குமாஎன்ற இடத்தில் எழுகின்ற சந்தேகங்களை முறியடிக்க அன்பருக்கு நம்பிக்கை வேண்டும்.

ஆன்மீகம்என்பது அதனுடைய எல்லாப் பாகங்களிலும் ஒரு நேர்த்தியை நாடுகிறது. ஆன்மீகப் பண்புகளான நன்றியறிதல், பணிவு, உண்மை பேசுதல், இறையார்வம், தன்னைப் பிறருக்கு வழங்குவது, சரணாகதி மற்றும் சமர்ப்பணம்என்று இவையெல்லாம் முழுமையாக இருக்கும்பட்சத்தில் தான் அவற்றிற்குரிய முழுப்பலன் கிடைக்கும். இதே நியதி நம்பிக்கைக்கும் பொருந்தும். ‘அன்னையின் அருளால் பிரச்சினையைத் தீர்த்துக்கொள்வது’ என்று ஓர் அன்பர் முடிவு செய்துவிட்டபிறகு, அருளின்மேல் வைக்கின்ற

நம்பிக்கையை பாதிக்கக்கூடிய எந்தச் சந்தேகத்தையும் அவர் அனுமதிக்கக் கூடாது. நம்பிக்கை மற்றும் சந்தேகம், இவையிரண்டும் நேர் எதிரிகள். சந்தேகத்தை அனுமதிக்கும் அளவுக்கு நம்பிக்கை குறைந்துபோகும். உதாரணமாக, ஓர் அன்பர் தம் சக்திக்கு மீறிக் கடன் வாங்கிவிட்டார் என்று வைத்துக்கொள்வோம்; கடனைத் திருப்பும் அளவுக்குத் தம் வருமானத்தை உயர்த்தும்படி அன்னையிடம் கேட்பதாக வைத்துக் கொள்வோம்; அதன்பின்னர் அருளால் அவருடைய வருமானத்தை எப்படி உயர்த்த முடியும்என்றோ, அது சாத்தியமாஎன்றோ கேள்விகள் எழ மனதில் அனுமதிக்கக்கூடாது. வருமானத்தை உயர்த்துவதற்கான வாய்ப்புகள் குறைவுஎன்று அவருடைய அறிவு அவருக்குச் சொல்லலாம். ஆனால் அறிவு எழுப்பும் சந்தேகங்களைப் பொருட்படுத்தாமல் அருள் அவர் வாழ்க்கையில் செயல்படுவதற்கு உதவக்கூடிய பண்புகளான சுத்தம், காலம் தவறாமை, முறையாகக் கணக்கெழுதுதல், பரநலம் பாராட்டுதல் போன்ற நல்ல பண்புகளை வளர்த்துக்கொள்வதில் கவனம் செலுத்த வேண்டும்.

வேலை, வருமானம், மனித உறவுகள், சாதனை ஆகியவற்றைப் பற்றிய அன்னையின் கருத்துகளைத் தெரிந்துகொள்கின்ற அன்பர் அவற்றை எந்தச் சந்தேகமும் இல்லாமல் அவருடைய வாழ்க்கையில் கடைப்பிடிக்கிறார் என்றால், இவ்விஷயங்களில் அவர் அன்னையை முழுமையாக நம்புகிறார் என்று அர்த்தம். அன்னையை நம்புவதாகச் சொல்கின்றவர் அதே சமயத்தில் தம் சொந்த வாழ்க்கையில் பிரச்சினை வரும்பொழுது அன்னையின் விதிமுறைகளைக் கடைப்பிடிக்கத் தயங்குகிறார்என்றால், உண்மையில் அவருடைய நம்பிக்கை முழுமையானது இல்லைஎன்று அர்த்தம். உதாரணமாக, கையிலிருக்கின்ற பணத்தைப் போட்டுச் செய்ய வேண்டிய வேலையைச் செய்தால், மேற்கொண்டு தேவையான பணம் தானாக வரும் என்ற அன்னையின் விதிமுறையை அன்பர் ஒருவர் கேள்விப்படுவதாக வைத்துக்கொள்வோம். இந்த விதிமுறையை நம்புகிறார்என்றால், தம் கையிலிருக்கின்ற பணத்தைப் போட்டு அவர் உடனே வேலையை ஆரம்பிக்க வேண்டும். ஒரு சில அன்னை அன்பர்கள் இம்மாதிரி செயல்பட்டு இருக்கிறார்கள். அம்மாதிரி செயல்படும்பொழுது கையிலிருக்கின்ற பணம் தீருகின்ற கட்டத்தில் வேலைக்குத் தேவையான கூடுதல் பணம் தானாக



வருவதைப் பார்த்துமிருக்கிறார்கள். இப்படிச் செயல்படாமல் வேலைக்குத் தேவையான எல்லாப் பணமும் கைக்கு வந்தால்தான் வேலையைத் துவங்குவேன்என்று ஓர் அன்பர் பேசினாரென்றால், இவ்விஷயத்தில் அவர் அன்னையை முழுமையாக நம்பவில்லைஎன்று அர்த்தம்.

நம்பிக்கையின்பேரில் ஒருவர் செயல்படுவதாகச் சொல்லும்பொழுது வரம்பற்ற ஜீவிய நிலையின் உயர்ந்த செயல்பாட்டை அவர் நம்புகிறார் என்று அர்த்தம். வரம்பற்ற நிலையினுடைய செயல்பாடு வரம்புக்கு உட்பட்டதனுடைய செயல்பாட்டிற்கு நேர் எதிர்மாறானதாக இருக்கும். நாம் அற்புதம்என்று சொல்வது இந்த உயர்ந்த வரம்பற்ற நிலை வரம்புக்கு உட்பட்ட ஜடநிலைக்கு இறங்கி வந்து, அங்கே தன் ஆற்றலை நிரூபிப்பது ஆகும். ஆகவே, இவ்விடத்தில் அருளை நம்பிச் செயல்படுகின்றவர்கள் மேற்கண்ட உயர்ந்த, வரம்பற்ற நிலையின் செயல்படும்தன்மை மற்றும் குணவிசேஷங்கள் என்னஎன்பதைத் தெரிந்துகொள்வது நல்லது. குறிப்பாக வரம்பற்ற நிலை வரம்புக்குட்பட்ட நிலையிலிருந்து எந்த அளவுக்கு மாறுபடுகிறதுஎன்பதைத் தெரிந்துகொள்வது நல்லது. வரம்பற்ற நிலையின் செயல்பாடுகளைத் தெரிந்துகொண்டு, அதன்படி செயல்படுகின்றவர்களின் செயல்பாடுகள் மற்றவர்களுக்கு வேடிக்கையாகத் தெரியலாம். ஆனால் மற்றவர்களுடைய கேலியைப் பொருட்படுத்தாமல் அவர்கள் தங்களுடைய செயல்பாட்டைத் தொடர்ந்து நிலைநாட்ட வேண்டும்.

| வரிசை எண் | வரம்புக்குட்பட்ட நிலையின் செயல்பாடு | வரம்பற்ற நிலையின் செயல்பாடு |
|---|---|---|
| 1. | வளர்ச்சிஎன்பது வெளியிலிருந்து வாங்கிக்கொள்வதால் மட்டும் வருகிறது. | பிறருக்குக் கொடுப்பதால் அதிக வளர்ச்சி வருகிறது. |
| 2. | சேமிப்பு செய்வதால் பணம் பெருகுகிறது. | செலவு செய்வதால் பணம் பெருகுகிறது. |
| 3. | புறம் அகத்தை நிர்ணயிக்கிறது. | அகம் புறத்தை நிர்ணயிக்கிறது. |
| 4. | நம் கண்ணோட்டம் மற்றவர் கண்ணோட்டத்தைவிட முக்கியம். | அடுத்தவர் கண்ணோட்டம் நம் கண்ணோட்டத்தைவிட முக்கியம். |
| 5. | கடந்த கால தவறுகளைச் சரி செய்வது சிரமம். | சமர்ப்பணத்தின்மூலம் கடந்த காலத் தவறுகளைச் சரி செய்யலாம். |
| 6. | பகுதி முழுமையைவிடச் சிறியது. | பகுதி முழுமையைவிடப் பெரியதாக இருக்கக்கூடும். |
| 7. | இயற்கை வளங்கள் அளவுக்குட்பட்டு இருப்பதால் வளர்ச்சியும் அளவுக்குட்பட்டுதான் இருக்கும். | நம்முடைய அறிவுத்திறன் அளவுகடந்து இருப்பதால் வளர்ச்சிக்கு வரம்பில்லை. |

| | | |
|---|---|---|
| 8. | காலம் மற்றும் இட தடைகளை வெல்ல முடியாது. | கால, இட தடைகளை வெல்ல முடியும். |
| 9. | பணம், பொருள், மனிதர்கள் என்று இவற்றின்மேல் அகந்தைக்குள்ள பிடியை வலுப்படுத்த வேண்டும். | இவ்விஷயங்களில் அகந்தை தன் பிடியைத் தளர்த்தி ஆன்மா செயல்பட அனுமதிக்கும். |
| 10. | அகந்தை தன் அதிகாரத்தை வலியுறுத்தி வளரும். | ஆன்மா தன்னுடைய மௌன சக்தியால் வளரும். |

வரம்பற்ற நிலையின் மேற்கண்ட விதிமுறைகளைத் தெரிந்து கொள்கின்றவர்கள் இவ்விதிமுறைப்படித் தங்கள் வாழ்க்கையை அமைத்துக் கொள்ளலாம். இவ்விதிமுறைகளை நம்புகின்ற அன்பர் தொழில் செய்பவராக இருந்தால் ஊழியர்களுக்கு ஊதியத்தை அதிகரிக்க முன்வர வேண்டும். ஊதியத்தை அதிகரிக்கும்பொழுது அவருடைய உற்பத்தித்திறன் அதிகரிக்கும். அதனால் விற்பனை அதிகரித்து, வருமானம் அதிகரிக்கும். செலவைக் குறைப்பதற்காகச் சம்பள விஷயத்தில் சிக்கனம் காட்டுகின்ற மற்ற சாதாரணத் தொழிலதிபர்போல இவர் செயல்படக்கூடாது. தம்முடைய கஸ்டமர்களுக்கு விலையை சந்தோஷமாகக் குறைக்க முன்வர வேண்டும். எப்பொழுது விலையை ஏற்றலாம்என்று எதிர்பார்த்துக்கொண்டிருக்கக் கூடாது. மார்க்கெட்டிலிருந்து கிடைக்கும் ஆதரவு மற்றும் மலிவான கச்சாப் பொருட்கள்என்று இவற்றை நம்புவதைவிடத் தம்முடைய ஸ்தாபனத்தி-னுடைய organisational பண்புகள் மற்றும் ஊழியரின் திறமைகளை அதிகமாக நம்ப வேண்டும். எல்லா வியாபார நடவடிக்கைகளையும் அடுத்தவர் கண்ணோட்டத்திலிருந்து பார்க்க வேண்டும். அன்னையிடம் வருவதற்குமுன் நஷ்டப்பட்டிருந்தாலும் அன்னையிடம் வந்தபிறகு ஆத்ம சமர்ப்பணத்தின்மூலம் கடந்தகாலத் தவறுகளைச் சரி செய்து நஷ்டத்தில் இருந்து மீளலாம்என்று நம்ப வேண்டும். தம் நிறுவனத்தையே இழந்திருந்தாலும் தம்மால் மீண்டும் ஒரு புதிய நிறுவனத்தை நிறுவி, முன்னைவிடப் பெரிதாக வளர முடியும்என்று நம்ப வேண்டும். பழைய கம்பெனியைக் குறிப்பிட்ட அளவு வளர்ப்பதற்குப் பத்து வருடம் ஆகிறதென்றால், புதிய கம்பனியை அதில் பாதி வருடங்களில் இரண்டு மடங்கு பெரிதாக்க முடியும்என்று நம்ப வேண்டும். ஊழியர்கள் கம்பனியை விட்டு விலகி தாமே சொந்தமாக ஒரு நிறுவனம் அமைக்க விரும்பினால், அதைக் கண்டு அஞ்சக்கூடாது. மார்க்கெட்டைத் தேடி தாம் போவதற்குப்



பதிலாக மார்க்கெட் தம்மை நாடி வருமளவிற்குப் புற நிகழ்ச்சிகளை அக உணர்வுகளால் நிர்ணயிக்க வேண்டும்.

வரம்பற்ற உயர்நிலை நம் வாழ்க்கையில் செயல்பட வேண்டுமென்றால் அந்நிலையின் மீது நமக்கு அளவுகடந்த நம்பிக்கை வேண்டும். அப்படிப்பட்ட நம்பிக்கை உள்ளவர்களுக்கு அதற்கேற்ற அளவுக்குப் பலன்களும் கிடைக்கும். சமூகம் பொதுவாகப் பணம், பதவி, அந்தஸ்து, ஊர் வழக்கம் போன்றவற்றின் மேல் நிறைய நம்பிக்கை வைத்திருக்கும். உயர் நிலைக்கு நம்பிக்கையை கொண்டுபோக விரும்புகின்றவர் சமூகம் நம்புகின்ற விஷயங்களின் மேல் தமக்குள்ள நம்பிக்கையைக் கைவிட வேண்டும். அவருக்குப் பிரச்சினை என்று வந்தால் தம்முடைய பண பலத்தாலோ, பதவி பலத்தாலோ அல்லது தமக்குள்ள சமூகச் செல்வாக்கை வைத்துக்கொண்டோ அந்தப் பிரச்சினையைத் தீர்க்கலாமாஎன்று எண்ணக்கூடாது. இந்த எல்லா அணுகுமுறைகளையும் பயன்படுத்திப் பார்த்து பலனில்லாதபட்சத்தில் அன்னையிடம் பிரார்த்தனை செய்தாரென்றால், அது நம்பிக்கைக்கு அடையாளமாகாது. ஆனால், துவக்கத்திலேயே பிரச்சினை வந்தவுடன் அன்னையிடம் சமர்ப்பணம் செய்துவிட்டு, அருள் காட்டும் வழிகளில் செயல்பட முன்வந்தாரென்றால் அவர் அருளைப் பரிபூரணமாக நம்புகிறார் என்று அர்த்தம். உதாரணமாக, ஒரு பணக்கார அன்பரை இன்னொருவர் வழக்குத் தொடுத்து, கோர்ட்டுக்கு இழுப்பதாக வைத்துக்கொள்வோம். அன்பர் உடனே ஒரு பெரிய தொகை கொடுத்து, ஒரு பெரிய வக்கீலை நியமித்து வழக்கை எதிர்கொள்ளத் தீர்மானிக்கிறாரென்றால் அவர் தம் பண பலத்தைதான் நம்புகிறார்என்று அர்த்தம். அல்லது தமக்குத் தெரிந்த சமூகத்திலுள்ள பெரிய மனிதர்கள் சிலரைத் தமக்கு சாட்சியாக கோர்ட்டிற்கு வரும்படி அழைக்கிறாரென்றால் அவர் தம் சமூகச் செல்வாக்கைத்தான் நம்புகிறார் என்று அர்த்தமாகிறது. தன்னிடம் இருக்கின்ற பத்திரங்கள், ஆவணங்கள் ஆகியவற்றை வைத்து வழக்கில் ஜெயிக்கலாம்என்று நினைக்கிறார் என்றால், அவர் தம்மைத்தான் நம்புகிறார்என்று ஆகிறது. வழக்குத் தொடுக்கப்பட்டுள்ளதுஎன்று கேள்விப்பட்டவுடன் தம் பணபலம், பதவிபலம், சமூகச் செல்வாக்குஎன்று எல்லாவற்றையும் மறந்து, அன்னைதான்

அவருக்கு முதலில் நினைவுக்கு வருகிறதென்றால், அவர் நம்பிக்கை முழுமையானதுஎன்று சொல்லலாம். பணபலம், பதவி பலம்என்று இவற்றை நம்புவது வேறு; நம்பிக்கை அன்னை பேரில் இருக்க, வழக்காடுவதற்குத் தேவையான வக்கீல் சம்பளம் மற்றும் சாட்சிகளைச் சேகரிப்பதுஎன்ற இடத்தில் இவற்றைச் சாதனமாகப் பயன்படுத்துவது வேறு. நம்பிக்கை அன்னையின் பேரில் இருந்தால் பணம் மற்றும் சாட்சிகள் எல்லாம் கருவிகள்தாம்என்ற நிலையில் அன்பர் இருந்தால், இவர் மேல் வழக்கைத் தொடுத்தவர் மனம் மாறி சமாதானத்திற்கு வரலாம். அல்லது பெரிய வக்கீல் அவருடைய நிலைக்கேற்ற பெரிய சம்பளம் கேட்காமல் இவருக்கு வேலை செய்யலாம். இவருக்குப் பிரச்சினை வந்துவிட்டதுஎன்று தெரிந்தவுடன் சமூகத்தில் செல்வாக்கு உள்ள இவருடைய நண்பர்கள் இவர் கேட்காமலேயே தாமாக சாட்சிகளாகச் செயல்பட முன்வரலாம். அல்லது எதிராளி தொடுத்த வழக்கு ஆதாரமில்லாததுஎன்று கூறி நீதிபதி தள்ளுபடி செய்யலாம். அன்பரின் நம்பிக்கை முழுமையாக இருந்தால் இவையெல்லாமே சாத்தியம். ஆனால், அன்பருக்கு நம்பிக்கை இல்லை என்று தெரிந்தால், அவருடைய பதவி, பணபலம், சமூகச் செல்வாக்கு மற்றும் ஆவணங்களின் ஆதாரம்என்று எதுவுமே அவரைக் காப்பாற்ற முடியாமலும் போகலாம். அன்னையின் அருள்தான் தமக்கு ஒரே பாதுகாப்பு என்று அவர் உணரும் கட்டத்தில்தான் அவருக்கு அந்த வழக்கிலிருந்து விடுதலை கிடைக்கலாம்.

நிறைய பேர் physical levelனுடைய வரம்புகளை நிலையானதுஎன்று எடுத்துக்கொள்கிறார்கள். இந்த வரம்புகளை மீறி அருள் நமக்கு வேண்டியதைப் பெற்றுத்தரும்என்று நம்புவதே அவர்களுக்குச் சிரமமாக இருக்கிறது. ஒருவரிடம் டாக்டர் அவருக்கு கேன்சர் வந்திருக்கிறது; குணப்படுத்த முடியாதளவிற்குப் பரவிவிட்டதுஎன்று சொல்கிறாரென்றால், டாக்டர் சொல்லியதை அப்படியே நம்பி, நோயாளி உயிர் பிழைப்போம் என்ற நம்பிக்கையை இழக்கிறார். ஒரு கூட்டம் அதிகமான இடத்தில் தம்முடைய பணத்தையோ, மோதிரத்தையோ அல்லது செல்போனையோ தொலைக்கின்றவர், 'போனது போனதுதான்' என்று நம்பிக்கையை இழக்கிறார். பணத்தையோ, பொருளையோ கவனிக்காமல் விட்டுவிட்டு



வந்துவிட்டால், அது திருடுபோகும்என்பது ஒரு பரவலான நம்பிக்கை. அதை நம்புகிறவர்களுக்கு அதுவே பலிக்கிறது. தவறவிடுகின்ற வாய்ப்புகள் திரும்ப வருவதில்லைஎன்பதும் ஒரு பரவலான நம்பிக்கை. நீண்ட நாள் கடினமாக உழைத்தால்தான் நிறைய சம்பாதிக்க முடியும்என்பது ஒரு நம்பிக்கை. நீண்ட நாட்கள் தேவையில்லை; குறைந்த நாட்களிலேயே நிறைய சம்பாதிக்கலாம்என்று இப்படிப்பட்டவர்களிடம் சொன்னால் அவர்களால் அதை நம்ப முடியாது.

ஆனால் உண்மையில் எந்தச் சூழ்நிலையையும் நமக்குச் சாதகமாக மாற்றிக்கொள்ளலாம். நாம் அருளைப் பரிபூரணமாக நம்புகிறோம்என்ற ஓர் ஒத்துழைப்பை நாம் வழங்கினால்போதும். 1983இல் மாரீஸ் குட்மென் என்ற ஓர் அமெரிக்க பைலட் ஓட்டிய விமானம் விபத்துக்குள்ளாகியதால் முதுகெலும்பில் அடிபட்டு நடக்க முடியாத நிலையில் மருத்துவமனையில் நோயாளியாகச் சேர்ந்தார். அவரைப் பரிசோதித்த டாக்டர்கள் அவர் தம்முடைய முதுகெலும்பு, குரல்வளை, உதரவிதானம் என்று எல்லாவற்றை-யும் காயப்படுத்திவிட்டதால் அவரால் நடக்கவோ, பேசவோ, சாப்பிடவோ, சுவாசிக்கவோகூட முடியாதுஎன்று பேசினார்கள். ஆனால் அவர்கள் சொன்ன எதையும் இவர் நம்பத் தயாராக இல்லை. தாம் குணமாகி ஆறே மாதத்தில் மருத்துவமனையை விட்டு நடந்தே வெளியேற வேண்டும் என்று தீர்மானித்தார். இதற்கு ஏற்றளவு தம்முடைய மனோதிடத்தை வலுப்படுத்தினார். தாம் பூரண குணம் அடைந்து எல்லோரையும்போல் செயல்படுவதுபோல தம்முடைய அகக்காட்சியில் கற்பனையாகப் பார்த்துக் கொண்டேயிருந்தார். அவர் சொன்னதுபோலவே ஒன்றன் பின் ஒன்றாகத் தம்முடைய உடல் குறைபாடுகளைச் சரி செய்துகொண்டு, அவர் முடிவு செய்திருந்த நாளில் மருத்துவமனையைவிட்டு நடந்தே வெளியேறினார். அவரைக் காப்பாற்றியது அவருக்கிருந்த இறை நம்பிக்கை. அவருடைய Higher Selfஐ மட்டும் முழுமையாக நம்பி, டாக்டர்கள் சொன்னதை உதாசீனம் செய்தார். அவருடைய Higher Selfஐ அவர் நம்பியது அவர் அன்னையை அழைத்ததற்குச் சமமாகும். அன்னையைப் பற்றி அவருக்குத் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. இருந்தாலும் Higher Self என்ற ரூபத்தில்

அன்னையின் அருள்தான் வாழ்க்கையில் செயல்பட்டு அவரைப் பிழைக்க வைத்ததுஎன்று நாம் நிச்சயமாக நம்பலாம்.

❀❀❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

ஜீவன் முழுவதும் நிலைப்பது, விழிப்பில் ஏற்படுவது; தியானத்தில் அன்று.

***விழிப்பில் ஜீவன் முழுவதும் தியானத்தில் ஆழ வேண்டும்.***

## ஸ்ரீ அரவிந்த சுடர்

சரியாகச் செய்தால் 'திருவுளம் நிறைவேறட்டும்' என்பது அகந்தையைக் கரைக்கும் என்கிறார் அன்னை. எது சரி? பேச்சு, நோக்கம் போன்றவற்றிற்கு நோக்கம் இருப்பதைப் போல் 'திருவுளம் நிறைவேறட்டும்' என்பதற்கும் ஓர் உண்மை உண்டு. வாயால் சொன்னால் அது சப்தமாகி, சீக்கிரம் அலுத்துவிடுகிறது. ஆழத்திலிருந்து, உண்மையில்லாமல் சொன்னால் சீக்கிரம் எரிச்சல் வரும். ஒவ்வொரு சமயத்திலும் நம் இச்சை (will) ஓர் அபிப்பிராயம், பிரியம், வேகம், உந்துதலாக வெளிப்படுவதைப் பார்க்கலாம். இறைவனை அழைப்பதன் முன் நம்மை ரத்து செய்ய வேண்டும். ஆழ்ந்த இடத்தில் திருவுள்ளத்தை நாட வேண்டும். அது சரி. அப்படி உச்சரித்தால், அது உள்ளுறை பிரம்மத்தைத் தொடும். அதற்கு மேல்உலகம் குரல் எழுப்பும்.

***ஆழ்ந்து திருவுள்ளத்தை நாடினால் உலகம் குரல் எழுப்பும்.***



# அன்பர் கடிதம்

*ஓம் நமோ பகவதே ஸ்ரீ அரவிந்தாய!*

கடந்த சில வருடங்களாக நான் அன்னையை வணங்கி வருகிறேன். நான் +2 படித்துகொண்டு இருக்கும்போது, ஒரு சிம்பலை பாண்டிச்சேரியில் ஓரிடத்தில் பார்த்தேன். ஒரு நாள் அந்த சிம்பலை போடலாம் என நினைத்து போட்டுக்கொண்டு இருக்கும்போது (அன்றைக்கு எனக்கு +2 ரிசல்ட் வரும்எனத் தெரியாது) ஓர் அன்னை அன்பர் வந்து என்னுடைய ரிசல்ட்டைக் கொடுத்துவிட்டுச் சென்றார். அந்த முறை என்னுடன் எழுதிய மாணவர்கள் பெரும்பாலானோர் பரீட்சையில் தவறினர். ஆனால் அந்த முறை அதிசயத்தக்க வகையில் நான் அந்த ஆண்டு பரீட்சையில் 753 மார்க் வாங்கி பாஸ் செய்து இருந்தேன். இது நிச்சயமாக அன்னையின் அருளால்தான் நடந்தது. ஏனெனில் அந்த ஆண்டு நான் பரீட்சைக்கு 10 நாட்கள் முன்னர் மட்டுமே படித்து இருந்தேன்.

அதன்பிறகு எல்லா காலேஜுக்கும் அப்ளை செய்து இருந்தேன். ஆனால் எந்த காலேஜில் இருந்தும் அழைப்பு வரவில்லை. எனவே டிப்ளமோவில் E.E.E. சேர்ந்து படித்தேன். டிப்ளமோ முடித்து, B.E. சேர்வதற்கு டிப்ளமோவின் மூன்றாவது ஆண்டு மார்க்குகள் மட்டுமே கணக்கில் எடுத்துக்கொள்வார்கள். இரண்டாவது ஆண்டில் 85% மார்க் குறைவாக வாங்கி இருந்த நான் அன்னையின் அருளால் மூன்றாவது ஆண்டில் 92% மார்க்குகள் வாங்கி பாஸ் செய்தேன்.

B.E. கவுன்சிலிங் சென்றபோது தரப்பட்டியல் வரிசையில் 1024 இடத்தில் இருந்தேன். மொத்த இடங்கள் 6000 இருந்தது. எனவே நான் நினைத்த இடத்தில் E.E.E. கிடைத்துவிடும் என நினைத்தேன். ஆனால் என்னுடைய கவுன்சிலிங் டைம் வரும்போது E.E.E. எல்லா இடங்களும் பூர்த்தியாகி இருந்தது. எனவே நான் காலியாக இருந்த மகேந்திரா பொறியியல் கல்லூரியில் B.Tech. (I.T.) சேர்ந்தேன். நான் நினைத்த இடத்தில் கிடைக்கவில்லைஎன வருத்தத்தில் சென்ற எனக்கு, அங்கு அட்மிஷன் போடச் சென்றபோதுதான் கல்லூரி prospectusஇல் கடைசி பக்கத்தில் அன்னை ஸ்ரீ அரவிந்தரைப் பார்த்தேன். பிறகுதான் தெரிந்தது அந்த இடம் எனக்கு அன்னை அளித்தது என்று; மிகவும் மகிழ்ச்சி அடைந்தேன்.

பிறகு கடைசி ஆண்டு படித்துக்கொண்டு இருக்கும்போது ஒரு பேப்பரில் அரியர் என்று ரிசல்ட் வந்தது. நான் அதை நம்பாமல் revaluationக்கு அப்ளை செய்துவிட்டு, அன்னையிடம் ரிசல்ட் பாஸ்என வர வேண்டும்என வேண்டிக்கொண்டு, நான்கு வருடங்கள் கழித்து மேற்கூறிய சிம்பலை மீண்டும் போட்டேன். ரிசல்ட், அன்னையிடம் வேண்டிக்கொண்டபடி, பாஸ்என வந்தது. அன்னைக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு மிகவும் மகிழ்ச்சி அடைந்தேன்.

நவம்பர் 2005 வரை அந்த சிம்பலின் பெயர் என்னவென்று எனக்கு தெரியாது. மற்றோர் அன்னை அன்பர் வந்து இன்டர்நெட்டில் தாம் பார்த்ததாக எனக்கு விவரம் கூறினார். அப்போதுதான் இந்த சிம்பலின் அர்த்தம் என்னவென்று எனக்கு தெரிந்தது. அது முதல் எனக்கு, அன்னையின் அருளால், இந்த சிம்பல் போட்ட காரணத்தினால்தான், நான் இந்த அளவுக்குப் படித்தேன்என்று புரிந்தது. ஏனென்றால் அது கல்விக்கான (education) சிம்பல் ஆகும்.

❀❀❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

**எதிர்பார்த்தல்:** விஷயம் முடியும்என்பதை மனம் சுட்டிக் காட்டுவதை எதிர்பார்ப்பது குறிக்கும். உணர்வின் நம்பிக்கையை எதிர்பார்க்கிறது. கடந்த கால அனுபவத்தால் ஒரு முறை அறிந்ததை ஆயிரம் முறை திரும்பச் செய்வது உடலின் பழக்கம். எதிர்பார்ப்பதும் அதற்கு இதுவே. இறந்து போனவரைத் தேடும் நிலையும் கண்ணுக்குண்டு. ரயிலில் அனுப்பிவிட்டு வீட்டுக்கு வந்தபிறகு அவரை வீட்டில் தேடுவதும் உடலுக்கு முடியும்.

***எதிர்பார்ப்பது சக்திவாய்ந்தது.***





## உயிரோடுள்ள உணர்வு (Vital Sensitivity)

கர்மயோகி

- ✡ **நாம் பிறரிடம் பேசுவது, பழகுவது பொய்யில்லைஎன்றாலும், பூரண உண்மை இல்லை.**
- ✡ **எப்படிப் பேச வேண்டும்என நாம் கற்றுக்கொண்டிருக்கிறோம். அப்படிப் பேசுகிறோம். அதையே உண்மையென நம்புகிறோம். அது மேல்மனம் (Surface Mind). அது ஜீவனற்றது; சப்பென இருக்கும். நாளாவட்டத்தில் நாம் அதை உண்மையென நம்புகிறோம்.**
- ✡ **நமக்குரிய உணர்வு, நம் உணர்வின் உண்மை, 'நாம்' என்பது அதைக் கடந்து ஆழத்தில் (depth of the surface, not the real depths) உள்ளது. அவற்றுள் வேண்டியது, நல்லது, புல்லரிக்கும்; புளகாங்கிதம் தரும். வேண்டாதது கனவிலும் வெளி வாராது. அவ்விடம் நல்ல முறையில் வெளி வந்தால் முகம் பிரகாசமாகும்; உடல் ஒரு க்ஷணத்தில் ஒரு சுற்று பருத்துவிடும்; பசி, தாகம் தெரியாது; உடல் பளபளக்கும். நம் திறமை, குடும்ப பெருமை, செல்வம், நாணயம், அந்தஸ்து அங்கு உறைகிறது. போன தலைமுறை திருட்டு, கெட்ட நடவடிக்கை, நாம் மறைக்க விரும்புவது, மறக்க விரும்புவது அங்கு ஒளிந்துள்ளது. அது மேல்மனத்தின் ஆழம். அங்கிருந்து எழும் பிரார்த்தனை உடனே பலிக்கும். ஆழ்ந்த பாசம், பற்று, சொத்துரிமை, குடும்ப எதிர்காலம் அவ்விடத்திற்குரியது. நான் கூறும் 8 தலைகீழ் திருப்பங்களில் (reversal) அது இரண்டாம் நிலைக்குரியது. அங்குள்ள நல்லவை நம்மையறியாமல் மேல்மனத்தின் பின்னால் ஆனந்தமான ஆர்வமாக வீற்றிருந்து வாழ்வுக்குத் தெம்பூட்டும். அங்குள்ள கெட்டவை வெளிப்பட்டால் மயக்கம் வந்து மூர்ச்சையடையும். நமக்குத் திறமையில்லைஎன அங்கு நாம் அறிவோம். அதை மேல்மனம் ஏற்காது. அதை நினைவுபடுத்தும் நிகழ்ச்சிகள் அங்குப் பதிவாகியிருக்கும்.**

கடன் வாங்கித் திருப்பித் தந்திருக்கமாட்டோம், மறந்திருப்போம்; அது மறந்திருக்காது. 'நாம்' அதை நினைவுபடுத்த அனுமதிப்பதில்லை. வாழ்க்கை அந்நிலையிலுள்ள நல்லதை நினைவுபடுத்தினால் அதிர்ஷ்டம் சாதிப்பதை அது சாதிக்கும். முகஸ்துதி செய்பவருக்கு அந்த இடம் தெரியும். அது மலரும்படிப் பேசுவார்கள். பிறரை மனம் புண்படும்படிப் பேசுபவர் அதை அறிவர். குத்தலாகப் பேசி அந்த இடத்தைக் கிளப்புவார்கள். அவர்கட்குப் பிறரை அப்படிப் புண்படுத்தும் சந்தர்ப்பம் வந்தால் விடமாட்டார்கள்; விடமுயன்றாலும் முடியாது.

- நாம் நம்மை அங்கு அறிவது உண்மை.

  அது வாழ்வுக்குரிய உண்மை.

  யோகத்திற்குரிய உண்மை 8ஆம் நிலையில் உள்ளது.

  இது இரண்டாம் நிலை உண்மை.

- எவரும் இதைக் கிளறி மேலே கொண்டுவரப் பிரியப்படமாட்டார்கள்.

  தானே அது மேலே வரும்பொழுது சமர்ப்பணம் செய்ய உஷாராக இருப்பது வாழ்வை யோக வாழ்வாக மாற்றும்.

- அங்குள்ள கெட்டதைச் சமர்ப்பணம் செய்வது கடினம்.

  நல்லதைச் சமர்ப்பணம் செய்வது அதைவிடக் கடினம்.

  அந்நிலையை - நல்லது, கெட்டது - ஏற்பது உண்மை sincerity.

- அன்னையை ஏற்றபின் அவை மேலே வரும்.

  நாம் அதை விலகாமல், ஏற்க மனம் துணிய வேண்டும்.

  நம் எதிர் வீட்டில் உள்ளவர் ஜெயிலுக்குப் போனவர்என்பதை ஒருவர் தவறாக நாம் ஜெயிலுக்குப் போனதாக நினைப்பதாக அறிந்தாலும் மனம் துணுக்குறும்.

- 'இவையெல்லாம் ஒருவர் வாழ்வில் வரக்கூடாது. எதிரிக்கும் வரக் கூடாது' என நாம் நினைக்கும் விஷயங்களிவை.

  நம் வாழ்வை நிர்ணயிப்பவை இவை.

  தவத்தை மேற்கொள்பவருக்கு இவை அழியும், கரையும்.



தவம் காலத்தைக் கடந்த நிலை. அதனால் அதற்கு இந்த சக்தி உண்டு.

இந்த இடம் காலத்திற்குரியது; நம் கண்ணில் படாத இடம்.

- Psychoanalysis மனோதத்துவ ஆராய்ச்சி இவ்விடத்தைக் கிளறி ஆராய்கிறது. அதைச் செய்யும் டாக்டர்கட்கு psychiatrist எனப் பெயர். ஆரம்பத்தில் இந்த ஆராய்ச்சி பெரும்பலன் தரும். முடிவாகப் பலனிருக்காது. இத்துறையில் ஓர் அனுபவம் உண்டு. "இந்த ஆராய்ச்சி பல ஆண்டில் பலன் தரும். இதைச் செய்யாமலிருந்தாலும் அதே பலன் அதே காலத்தில் வரும்." அந்த இடம் ஆழமானது. நாம் என்ன செய்தாலும், செய்யாவிட்டாலும் அதுவே தன்னைச் சரி செய்துகொள்ளும். நம்மால் (psychiatristஆல்) அதைச் சமாளிக்க முடியாதுஎனப் பொருள்.

- அன்பருக்குரியது என்ன?

  தவம் கரைப்பதை அருள் கரைக்கும்.

  அருளை முன்வைத்து, நம்மை இரண்டாம்பட்சமாக்கி, பிரார்த்தனை செய்தால் அது கரையும்; அழியும்; மறையும்; முழு விடுதலை தரும்; குறை அகலும்; மனம் விலகும். அது இருந்ததும் தெரியாது, போனதும் தெரியாது. Anaesthesia மயக்க மருந்து கொடுத்து ஆப்பரேஷன் செய்தது போலிருக்கும். அறிவோ, அனுபவமோ இல்லாமல் psychiatric patient மனோதத்துவ ஆராய்ச்சியிலிறங்கினால் அது மயக்க மருந்தில்லாமல் ஆப்பரேஷனாகும்; பலன் பொதுவாக, இருக்காது.

- அதைவிட உயர்ந்த முறையொன்றுண்டு.

  அன்னையை அறிந்து, அவர் வாழ்வைப் பற்றிப் படிக்கும்பொழுது, சோகமான உருவங்கள் அவர் ஆடையைத் தொட்டவுடன் சோகம் நீங்கியது எனவும், சைனாக்காரனை அன்னை திரும்ப அனுப்பினார் எனவும் படிக்கிறோம். இது போன்று 100க்கு மேற்பட்ட செய்தி-களைப் படிக்கிறோம். நடக்காதது நடப்பதைப் பார்க்கிறோம். நம்

**தகுதியில் இல்லாதது நமக்கு வருவதைப் பார்த்து அனுபவிக்கிறோம். பகவானை அன்னை எப்படி ஏற்றார், அவர் வீட்டைக் காண்பித்த-வருக்கு எப்படி நன்றி கூறினார், 10 மைல் தூரத்திலுள்ள கிராமத்துக் கிழவியின் 'குரல்' கேட்டு எப்படி ஓடி வந்தார் என்றெல்லாம் படிக்கிறோம். படிக்கும்பொழுது அவ்வுண்மை நெஞ்சைத் தொடுகிறது. நெஞ்சுஎன நாம் கூறுவது இந்த இரண்டாம் நிலை.** ***இந்த நிலைக்கு மெய்யுண்டு, பொய்யுண்டு.*** **நாம் அந்நிலையின் மெய்யை அடைந்து, அதில் நின்று அன்னையை ஏற்று, லயித்து, அவர் வசமாகி, நம்மையும், நம் தேவைகளையும், நம் பிரச்சினைகளையும், பிரார்த்தனையையும் மறந்து, மனம் விரிந்து, பரந்து, நெஞ்சு ஆழ்ந்து, நெகிழ்ந்து, அன்னைக்கு நன்றியுடன் மகிழ்ந்தால், தவம் பலித்ததுபோல் நாம் எதுவும் செய்யாமல் அன்னையே அனைத்தையும் நாம் கேட்பதற்கு முன், கேளாமல் செய்கிறார். வேண்டாதது விலகும், வேண்டியது வளரும், இது அன்னை வாழ்வு; அன்னையின் இரகஸ்யம் எனலாம். இதை அனுபவிக்காத அன்பரில்லை. முழுவதும் அனுபவித்-தவரில்லை. முழுமையாக இதை ஏற்பது யோக வாழ்க்கையாகும்.**

❀❀❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

குறித்த நேரத்தில் செயல்படுவது ஒருவர் திறமையை அதிகப்படுத்தும். நேரத்தைப் பற்றிக் கவலைப்படாத இடங்களில் குறித்த நேரத்தில் செயல்பட்டால், அடுத்த நிலைக்கு அழைத்துச் செல்லும்.

***திறமையை உயர்த்தும் செயல் நிலையையும் உயர்த்தும்.***



# இன்றைய தேசபக்தி

N. அசோகன்

இன்று நாட்டில் நிலவுகின்ற விலைவாசி, குழந்தைகளின் படிப்புச் செலவு மற்றும் தவணை முறையில் வாங்கிய கடனைத் திருப்பி அடைக்க வேண்டிய அவசியம் போன்றவை எல்லாம் ஒன்று சேர்ந்து நம் நாட்டின் நடுத்தர வர்க்கத்தினரை மேலும் சம்பாதிக்க நிர்ப்பந்தப்படுத்துகின்றன. ஆனால் மாதாந்திரச் சம்பளம் பெறுகின்ற அவர்களின் வேலையில் இத்தகைய வருமானப் பெருக்கத்திற்கு அதிக வாய்ப்பில்லை. எல்லாப் பணக்கார நாடுகளிலும் சம்பளத்திற்காகச் செய்கின்ற வேலை கௌரவக் குறைவாகக் கருதப்படுகின்றது. அதிலும் அரசாங்க உத்யோகமென்பது மேலைநாடுகளில் யாரும் விரும்பாத ஒன்றாகும். அந்நாடுகளில் சுயமாகத் தொழில் செய்யத் தெரியாதவர்கள்தாம் அடுத்தவரிடம் சம்பளத்திற்கு வேலைக்குப் போகின்றார்கள். மேலைநாடுகளில் சமூகமே தொழில் முனைவர்களை மதிக்கின்றது. ஆனால் இந்தியாவில் இது தலைகீழாக உள்ளது. அரசாங்க வேலை கிடைக்காதவர்கள்தாம் இங்குக் கடை திறக்கின்றார்கள். இருந்தபோதிலும் இங்கும் நிலைமை மெள்ள மெள்ள மாறிக்கொண்டு வருகிறது.

அன்னியரின் நீண்டகால ஆதிக்கமென்ற காரணம் ஒரு பக்கமிருக்க, இன்னுமோர் ஆன்மீகக் காரணமும் உள்ளது. வேதத்தில் இரண்டு பிரிவுகளுள்ளன. ஒரு பிரிவு ஆன்மீக அறிவை வழங்குகின்றது. மற்றொன்று, சடங்குகளைப் பற்றிச் சொல்கிறது. வேதம் வழங்கும் ஆன்மீக அறிவை நாடியவர்கள் ரிஷிகளாகவும், முனிவர்களாகவும் விளங்கினார்கள். தவசிகளும், சன்னியாசிகளும் இன்றும் அந்தப் பாரம்பரியத்தைத்

தொடர்கிறார்கள். சடங்குகள் சம்பந்தப்பட்ட அறிவை நாடியவர்கள் புரோகிதர்களாக மாறி, குடும்ப வாழ்க்கையில் ஈடுபட்டார்கள். ரிஷி என்பவர் ஆன்மீகத் துறையில் அபாரத் தைரியத்தை வெளிப்படுத்துகின்றவராவார். இல்லறத்தில் சுயமாகத் தொழில் நடத்த முன்வருபவர், ரிஷிக்கு ஈடாக இல்லறத் துறையில் தைரியத்தை வெளிப்படுத்துகின்றார். நாம் பாதுகாப்பை நாடும்பொழுது நாளடைவில் அது நமக்குள் பயவுணர்வை உண்டு பண்ணுகிறது. பயத்திலிருந்து தன்னைக் காப்பாற்றிக்கொள்ள, சமூகத்தில் மரியாதை தரும் நிலையை மனிதன் தேடுகிறான். மரியாதையைக் காப்பாற்றிக்கொள்ள பொய் சொல்லவும் முனைகிறான். கடந்த ஏழெட்டு நூற்றாண்டுகளாக இந்தியா அனுபவித்த அன்னிய ஆதிக்கம் இந்தியர்களிடையே இருந்த தொழில்முனைப்பை மழுங்கடித்துவிட்டது.

செல்வ வளமென்பது தொழிலால் வருவது. தொழில் செய்வதில் ரிஸ்க் (risk) உள்ளது. தொழிலில் தீவிரமாக ஈடுபடும்பொழுது முழுமையாக ரிஸ்க் எடுத்துத்தான் செய்ய வேண்டும். மேலும், ரிஸ்க் என்பதை எந்நேரமும் சந்தித்துத்தான் ஆகவேண்டும். ஆகவே வெற்றி என்பது தைரியசாலிகளுக்குத்தானேயொழிய, பயந்து பின்வாங்குகின்றவர்களுக்குக் கிடையாது. அப்படியென்றால் பயப்படுகின்றவர்களுக்கு வாழ்க்கையில் முன்னேற வழி கிடையாதாஎன்ற கேள்வி எழுகிறது. அவர்களுடைய அச்சத்தைக் கைவிட்டுவிட்டுத் துணிவையும், தைரியத்தையும் வரவழைத்துக் கொண்டார்களென்றால் முன்னேற்றமுண்டு. பொதுவாக அச்சப்படுபவர்கள் பொய்யும் சொல்வார்கள். ஆகவே பொய்யைத் தவிர்த்து, மெய்யை மேற்கொண்டார்கள்என்றால் அந்த மெய் தைரியத்தை வரவழைக்கும்.

ஆன்மீகம் உண்மையை வெளிப்படுத்துவது. பொய் பேசும் பயந்த சுபாவமுள்ளவர் உண்மை பேசத் தீர்மானித்து ஆன்ம சக்தியைத் துணைக்கு அழைத்தாரென்றால், அவ்வான்ம சக்தி அவர் அச்சத்தை எடுத்துவிட்டுத் தைரியத்தைக் கொண்டுவருவதைப் பார்க்கலாம். ஸ்ரீ அன்னை ஆன்ம சக்தியின் சின்னமாக விளங்குகின்றவர்.



இவ்விஷயத்தில் அவரது அருளை நாடுவது நம் முடிவைப் பொருத்தது.

அரசாங்கப் பணியில் ஒரு பாதுகாப்பும், மரியாதையும் இந்நாட்டில் கிடைக்கிறதென்றாலும், ஒரு சிலருக்கே இவ்வாய்ப்பு பலிக்கிறது. இவ்வாய்ப்பைப் பெற்றுக்கொள்ள முடியாதவர்கள், தாம் எந்நிலையில் உள்ளார்களோ அந்நிலையில் வாழ்க்கையைத் தொடங்க முன்வர வேண்டும். இப்படி முன்வாராதவர்கள் பிற்காலத்தில் தற்போதைய நிலையைவிட இன்னும் கீழிறங்கி வாழ்க்கையைத் தொடங்க நேரிடும்.

ஆகவே இப்பொழுதுள்ள நிலையிலிருந்து தொடங்கி முன்னேறுவது நல்லது. 1940இல் தேசபக்தி என்றால் சிறைவாசமாக இருந்தது. இன்று அதே தேசபக்தி கடின உழைப்பு, சுயதொழில் மற்றும் துணிச்சலான செயல்பாட்டை வலியுறுத்துகிறது.

இந்நேரம் நாட்டிற்குத் தேவையான இவற்றை வெளிப்படுத்த மறுப்பது என்பது நாட்டிற்கு நாமாற்ற வேண்டிய கடமையிலிருந்து தவறுவதாகும். சுபிட்சமென்பது அதிகபட்ச உற்பத்தித்திறனைக் குறிப்பதாகும். ஆகவே சுபிட்சத்தை நாடி, கடின உழைப்பை வெளிப்படுத்துவதுதான் இன்றைக்கு உகந்த தேசபக்தியாகும். இதுவே நம் ஜீவனின் ஆழத்திலுள்ள உண்மை ஆகும்.

❀❀❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

பிரபஞ்சத்தை சத்தியஜீவியம் நிர்ணயிக்கின்றது. நம் வாழ்வை அகந்தை நிர்ணயிக்கின்றது. சத்தியஜீவிய செயலைக் காண இன்று நம்மை நிர்ணயிக்கும் அகந்தையை அழித்து, சைத்தியப்புருஷனால் நாம் ஆளப்பட வேண்டும்.

***அற்புதம் புலப்பட அனந்தனை வாழ்வில் காண வேண்டும்.***

## P.78 There is a provender for mind's satiety.

மனம் திகட்டும் மணியான பொருள்.

- ✡ தசை தாளம் போடுகிறது; ஆனால் ஆத்மா கீதம் எழுப்பவில்லை.
- ✡ காலம் தரும் கனிந்த இனிமை அனுபவித்தறியாத ஆனந்தம்.
- ✡ பெருவாரியின் அர்த்தமற்ற அனுகூலம்.
- ✡ பூரிப்பின் சிலை புதுமையை இழந்துள்ளது.
- ✡ புண்பட்ட புன்னகையின் ஜீவனற்ற கதிர்.
- ✡ மனமோ, உணர்வோ பெற்ற சிறு தென்றல்.
- ✡ லோகத்தின் அதிபதி உடலின் அடிமைக்கு வீசிய எலும்புத்துண்டு.
- ✡ ஆனந்தக் கட்டுப்பாட்டின் அடிச்சுவடு.
- ✡ அறியாமையின் அரியாசனமுள்ள அரண்மனை.
- ✡ பெற்றனவெல்லாம் உடனே பேற்றை இழந்தன.
- ✡ காலமெனும் கருவூலத்தில் காதறுத்த காசோலை.
- ✡ இருண்ட ஜடத்தின் அரைகுறையான ஆணவம்.
- ✡ செய்த முயற்சிகளெல்லாம் செய்யவில்லைஎனக் கூறும்,
- ✡ புதிய பிரபஞ்சத்தின் குழப்பமான அட்டூழியம்.
- ✡ வெற்றியெல்லாம் பெற்ற தோல்வியின் வித்து.
- ✡ காண்பதெல்லாம் கரையேறாக் காட்சியெனத் தோன்றும்.
- ✡ எழுந்து நிற்கும் ஏற்றமிகு எண்ணத்தின் அவநம்பிக்கை.
- ✡ சாதனையின் நிலையாமை.
- ✡ சிந்தனை ஜனிக்காத உலகின் சிந்தனைச் சிற்பி.
- ✡ கருத்தைக் கடந்த கடலுள் உள்ள தீவு.
- ✡ சிறுமையாய்ப் பிறந்து பெருமையை நாடும் பிறவி.



- ✡ தெய்வாம்சம் உள்ள விலங்கு.
- ✡ எவரும் வாழும் ஏற்றமற்ற வாழ்வு.
- ✡ அவன் செயல்களை எண்ணிக் கூட்டினால் எழும் சூன்யம்.
- ✡ கொளுத்திய தீவர்த்தியை அணைத்தது அவன் ஜீவியம்.
- ✡ தொட்டிலுக்கும், சுடுகாட்டுக்கும் மேலே சுடர்விடும் நட்சத்திரம் அவன் நம்பிக்கை.
- ✡ அவன் ஆத்ம-இலக்கு அவற்றைக் கடந்தது.
- ✡ அழியாத அமரத்துவமுள்ள ஆத்ம சத்தியம் அவன் உண்மை.
- ✡ தன்னையும், தமரையும் புதுப்பிக்கும் தனயன்.
- ✡ புது உலகை சமைத்ததில் வாழ்வான்.
- ✡ அறிவற்ற அவன் காலத்தைக் கடந்து அறிவான்.
- ✡ இயற்கையையும், விதியையும் கடந்த பிரம்மம் அவன்.

✧✧✧

- ✡ அவன் செயல் நிறைந்த வாழ்வினின்று அவன் பெற்ற ஓய்வு.
- ✡ மனித மாச்சரியம் அழிந்து அடங்கியது.

❀❀❀

### ஸ்ரீ அரவிந்த சுடர்

அறியாமை மனம் இருண்டது. உணர்வு மனம் ஓரளவு சூட்சுமமானது. சிந்தனைக்குரிய மனம் முழுவதும் சூட்சுமமானது. தன் கருமையை விட்டு, பாரபட்சத்தையும் இது விட முன்வந்தால், சத்தியஜீவியத் தொடர்பை இது மீண்டும் பெறலாம்.

# லைப் டிவைன்

கர்மயோகி

## XVI. The Triple Status of Supermind

It is easy to understand our world. Page No.142
We try to understand it from the apprehending Para No.1
Truth-Consciousness point of view.
It sees things from the individual soul.
It will be freed from the human mentality.
The action of the Divine Supermind is there.
Our mentality is admitted to participate in it.
Before that there is a duty.
Ishwara is the Lord.
He develops the world out of His being.
He does so by His Maya.
It is done out of the original concentrated unity.
We must see what we have realised of this.
Or, what we can as yet realise of this consciousness.

We started with one assertion. Page No.142
It is all existence is one Being. Para No.2
Its essential nature is Consciousness.
It is one Consciousness.



## 16. சத்தியஜீவியத்தின் மூன்று கட்டங்கள்

நம் உலகைப் புரிந்துகொள்வது எளிது.
காலத்துள் உள்ள சத்தியஜீவிய (பிரக்ஞா) கண்ணோட்டத்தில் அதைக் காணலாம்.
ஜீவாத்மாவின் நோக்கில் அது பார்க்கும்.
அது மனித மனப் போக்கிலிருந்து விடுபட்டது.
தெய்வீக சத்தியஜீவியத்தின் செயல் அங்குண்டு.
அதில் நம் மனப்போக்கு கலந்துகொள்ள அனுமதியுண்டு.
அதற்கு முன் நாம் செய்யக்கூடியதுண்டு.
ஈஸ்வரன் உலகை ஆள்பவன்.
உலகைத் தன் ஜீவனிலிருந்து அவன் உற்பத்தி செய்கிறான்.
தன் மாயை மூலம் அதைச் செய்கிறான்.
ஆரம்பத்தின் செறிந்த ஐக்கியத்தினின்று அது செய்யப்பட்டது.
இதை எந்த அளவு நாம் அறிந்துகொண்டோம்என நாமறிய வேண்டும்.
இந்த ஜீவியத்தில் இதுவரை நாம் சாதித்ததென்னஎன அறிய வேண்டும்.

நாம் ஒரு கொள்கையுடன் ஆரம்பித்தோம்.
உலகனைத்தும் சத் புருஷனேஎன்று கூறினோம்.
அதன் முக்கிய சுபாவம் ஜீவியம்.
அது ஒரே ஜீவியம்.

Its active nature is Force or Will.

This Being is Delight.
This Consciousness is Delight.
This Force or Will is Delight.
This is Eternal.
It is inalienable Bliss of Existence.
It is Bliss of Consciousness.
It is Bliss of Force or Will.
It may be concentrated in itself.
And therefore it will be at rest.
It can be active or creative.
This is God.
This is ourselves in our essentials.
This is our non-phenomenal being.
It is concentrated in itself.
It possesses Bliss.
It is the essential, eternal, inalienable Bliss.
It can be active and creative.
Even then it does possess the same Bliss.
Here, we can say, it becomes the Bliss.
There it is the delight of the play.
It is the play of existence.
It is the play of consciousness.
It is the play of force and will.
That play is the universe.
That delight is the sole cause.
The motive and object of cosmic existence is that delight.
The Divine Consciousness possesses it.
It does so eternally and inalienably.
Our essential being is our real self.



**அந்த ஜீவியம் செயல்படும்பொழுது அது மன உறுதி அல்லது சக்தியாக இருக்கும்.**
**இந்த ஜீவன் ஆனந்தமயமானது.**
**இந்த ஜீவியம் ஆனந்தமயமானது.**
**இந்த சக்தியும், உறுதியும் ஆனந்தமயமானது.**
**இவை காலத்தைக் கடந்தவை.**
**சத்தின் ஆனந்தம் அதனின்று பிரிய முடியாதது.**
**அது ஜீவியத்தின் ஆனந்தம்.**
**அது உறுதி, சக்தியின் ஆனந்தம்.**
**அது அதனுள் செறிந்தது.**
**செறிவின் மிகுதியால் அது அசைவையிழந்தது.**
**அது செயல்பட்டு சிருஷ்டிக்கும் திறனுடையது.**
**அது கடவுள்.**
**நம் ஆழத்தில், அதன் சாரத்தில் நாம் அதுவே.**
**தோற்றத்தைக் கடந்த ஜீவன் இது.**
**அது தன்னுள் செறிந்தது.**
**ஆனந்தம் அதன் உடமை.**
**இந்த ஆனந்தம் சாரமானது; காலத்தைக் கடந்தது; பிரிக்கவொண்ணாதது.**
**இதனால் சுறுசுறுப்பாகச் செயல்பட முடியும்; சிருஷ்டிக்க முடியும்.**
**அப்பொழுதும் அதே ஆனந்தத்தை அது பெற்றுள்ளது.**
**இங்கு அது ஆனந்தமாகிறதுஎனலாம்.**
**அங்கு அது ஆனந்த லீலை.**
**அது சத்தின் லீலை.**
**அது ஜீவியத்தின் லீலை.**
**அது சக்தியின் (உறுதி) லீலை.**
**பிரபஞ்சம் அந்த லீலை.**
**அந்த ஆனந்தம் மட்டுமே முதற்காரணம்.**
**பிரபஞ்சம் ஏற்பட்டதும், இருப்பதும் இந்த ஆனந்தத்திற்காகவே.**
**தெய்வீக ஜீவியம் அதைப் பெற்றுள்ளது.**
**அது என்றும் பிரிய முடியாதபடி நடக்கிறது.**
**நம் உண்மையான ஆத்மா நமது சாரமான ஜீவன்.**

It is concealed from us.
The false self or mental ego conceals.
It also enjoys that play and delight.
It enjoys it eternally and inalienably.
It cannot indeed do otherwise.
It is one in being with the Divine Consciousness.
We aspire to a divine life.
The only way to attain to it is to unveil our self.
Our present status is the false self.
It is the mental ego.
We must rise to the true, higher status.
It is the true self, the Atman.
There we enter into unity with the Divine Consciousness.
It is now superconscient to us.
The Atman always enjoys the higher consciousness.
Otherwise we could not exist.
But our conscious mentality has forfeited it.

*Contd....*

❀❀❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

ஜீவனைக் கரைக்கும் விசாரம் போலல்லாமல், தியானம் எண்ணத்திலும், மனத்திலுமுள்ள சக்தியைத் திரட்டுகிறது. அது முழுமை பெற்ற நேரம், ஆழம் திறந்து மனோமயப்புருஷ தரிசனம் கிட்டும்.

***எண்ணம் முழுமை பெற்று மனோமயப்புருஷ தரிசனம் கிட்டும்.***



**அது நம்மிடமிருந்து மறைந்துள்ளது.**
**நம் அகந்தை பொய்யான ஆத்மா. அது மறைக்கிறது.**
**அந்த லீலையையும், ஆனந்தத்தையும் அது அனுபவிக்கிறது.**
**அதைக் காலத்திற்கும் பிரிய முடியாதபடி அனுபவிக்கிறது.**
**அது வேறு வகையாக இருக்க முடியாது.**
**தெய்வீக ஜீவியத்தினுடன் அது ஒன்றாக உள்ளது.**
**தெய்வீக வாழ்வை நாம் நாடுகிறோம்.**
**திரை மறைவில் உள்ளதை வெளிக்கொண்டுவருவது மட்டுமே வழி.**
**நாமிருப்பது பொய்யான வாழ்வு.**
**இது மனத்தின் அகந்தை.**
**உண்மையான உயர்ந்த நிலைக்கு நாம் உயர வேண்டும்.**
**இதுவே நம் உண்மையான ஜீவன், ஆத்மா.**
**இவ்வழி நாம் தெய்வீக ஜீவியத்துடன் ஐக்கியமாகிறோம்.**
**இது நம் ஜீவனுக்குப் புலப்படாதது.**
**ஆத்மாவுக்கு எப்பொழுதும் உயர்ந்த ஜீவியம் ஒத்துவரும்.**
**அப்படியில்லாவிட்டால், நம்மாலிருக்க முடியாது.**
**நம் மனப்போக்கு ஆத்மாவை இழந்துவிட்டது.**

*தொடரும்.....*

❀❀❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

நல்லது, கெட்டதான புறநிகழ்ச்சிகளை அகவுணர்வால் புரிந்துகொள்வது ஞானம்.

***நல்லவை உள்ளுணர்வை நேரடியாகவும்,***
***கெட்டவை தலைகீழாகவும் பிரதிபலிக்கின்றன.***

# ஆன்மீக மற்றும் மனோதத்துவ உண்மைகள்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

N. அசோகன்

**101.** கம்யூனிச அரசியல் அமைப்பு சுதந்திர முதலாளித்துவத்தைவிட உயர்ந்த அமைப்பாகும். கம்யூனிசத்தை மக்கள் தாமே முன்வந்து ஏற்றிருந்தால் அது நிலைத்திருக்கும். ஆனால் சோவியத் யூனியனிலும், கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும் அரசாங்க நிர்ப்பந்தம் கம்யூனிசத்தின்மேல் மக்களுக்கு வெறுப்பு ஏற்பட வைத்துவிட்டது.

**102.** ஏழ்மை மற்றும் இன்னல்களிலிருந்து விடுதலைவேண்டி மக்கள் இறைவனிடம் வேண்டும்வரையிலும் மதங்களும், இறைவழிபாடும் தொடர்ந்துகொண்டுதான் இருக்கும்.

**103.** ஆன்மீகம் மற்றும் யோக சாதனை ஆகியவை ஆன்மீக விழிப்புப் பெற்று, உலக வாழ்க்கையின்மேல் உள்ள நாட்டத்தைத் தாண்டி இறைவனோடு ஓர் ஆன்மீக ஐக்கியத்தை நாடுகின்ற ஏதோ ஒரு சிலருக்குத்தான் தேவைப்படும்.

**104.** அறிவு சாதனையாக மாற வேண்டுமென்றால் பணம், டெக்னாலஜி, மக்கள், பொருள், மார்க்கெட் இவை ஐந்தையும் ஒருங்கிணைத்துச் செயல்படக்கூடிய திறமை வேண்டும். சாதிப்பவர்களுக்கு இந்த திறமை இருப்பதாக அர்த்தம். சாதிக்க முடியாதவர்களுக்கு இத்திறமை இல்லை என்று அர்த்தம்.

**105.** மூலப்பொருட்கள் இயற்கையிலேயே உபயோகம் உடையவை அல்ல. நம்முடைய அறிவுதான் அவற்றை உபயோகமானதாக மாற்றுகிறது.

**106.** மேற்கத்திய நாடுகளுடைய சுபிட்சம் அந்நாடுகளுடைய பொருளாதார முயற்சிகளில் வெளிப்படும் organisationஉடைய விளைவாகும். அதே organisation நம் நாட்டுப் பொருளாதார முயற்சியில் வெளிப்பட்டால் அதே சுபிட்சம் இங்கும் வரும்.



**107.** முன்னேற்றம்என்பது மேற்கத்திய கலாச்சாரத்தை அப்படியே பின்பற்ற வேண்டும்என்று அவசியமில்லை. நம் நாட்டு கலாச்சாரத்தின் சாராம்சத்தையும், மேற்கத்திய டெக்னாலஜியையும் நாம் முறையாக, சரியான விகிதத்தில் ஒருங்கிணைத்துக்கொள்ள வேண்டும். இதற்குப் பதிலாக கண்மூடித்தனமாகப் பின்பற்றுவது சரியில்லை.

**108.** படிப்பு விஷயத்தில் மக்களுடைய ஆர்வம் தூண்டிவிடப்பட்டுள்ளதால் படிப்புமேல் மக்களுடைய மோகம் பரவுவதைப் பார்க்கிறோம். சுபிட்சத்தின் மேலும் இப்படி ஓர் ஆர்வம் தூண்டிவிடப்பட்டால் அதன் மேலும் மோகம் இம்மாதிரி பரவும்.

**109.** ஓர் அறிவாளி தனக்கு வரும் நெருக்கடியை வளர்ச்சிக்கான வாய்ப்பாக மாற்றிக்கொள்வான். அதே சமயத்தில் அறிவில்லாதவன் வாய்ப்பை பிரச்சினையாக மாற்றிக்கொள்வான்.

**110.** விழிப்புணர்வு இல்லாதவர்களுக்கு கஷ்டங்கள் மற்றும் நெருக்கடிகளைக் கொடுத்துதான் வாழ்க்கை அவர்களுக்கு விழிப்புணர்வைக் கொண்டு வருகிறது.

**111.** தலைவர் இல்லாதபொழுதுகூட ஒழுங்காக இயங்கும் ஸ்தாபனம்தான் உண்மையில் சிறப்பாக வேலை செய்யக்கூடியது. தலைவர் இல்லாத பொழுது முறையாக இயங்காதவை வேலையை இன்னும் சிறப்பாகக் கற்றுக்கொள்ளவில்லைஎன்று அர்த்தம்.

**112.** நம்முடைய உள் திறமைகளும், வெளி ஆதாரங்களும் ஒன்று சேரும் பொழுதுதான் நமக்கு முழுவெற்றி கிடைக்கிறது. உள் அம்சங்களும், வெளி ஆதாரங்களும் நிறைவாக இருக்கும்பொழுது நமக்கு நிச்சயம் வெற்றி கிடைக்கிறது. முயற்சி தோல்வி அடைகிறதென்றால், உள் அம்சங்கள், வெளி ஆதாரங்கள் இரண்டுமே இல்லைஎன்று அர்த்தம். வெளி ஆதாரங்கள் இருந்து உள் அம்சங்கள் குறைவாக இருந்தால், துவக்கத்தில் வெற்றி கிடைத்து, பின்னர் தோல்வியில் முடியும். இது

எதிர்மாறாக இருந்தால் துவக்கத்தில் தோல்வி, பின்னர் வெற்றிஎன்று முடியும்.

**113.** பணம்என்பது பொருளாதார மதிப்பை நிர்ணயிக்கும் ஒரு சின்னமாகும். பரஸ்பர நம்பிக்கையின் அடிப்படையில்தான் பணம் செயல்படுகிறது. நம்பிக்கை அதிகரிக்கும் இடங்களில் பணப்புழக்கம் அதிகரிக்கிறது. நம்பிக்கை குறையும் இடங்களில் பணப்புழக்கம் குறைகிறது.

**114.** பணத்தை உருவாக்கிய மனிதன் இன்று அதே பணத்திற்கு அடிமை ஆகியிருப்பது தன்னுடைய படைப்பாற்றலைத் தானே மறந்திருப்பதற்குச் சமமாகும்.

**115.** வேலை சம்பந்தப்பட்ட பண்புகள் நிறைந்துள்ள ஸ்தாபனங்களில் நம் முதலீட்டை அதிகப்படுத்தினால் ஸ்தாபனம் வளரும். வேலை சம்பந்தப்பட்ட பண்புகள் இல்லாத ஸ்தாபனங்களில் முதலீட்டை அதிகப்படுத்தினால் பலன் தற்காலிகமாகத்தான் இருக்கும்.

**116.** கடன்என்பது வருங்கால வருமானத்தை உத்தேசித்துத் தற்போதைய வாங்கும் திறனை அதிகப்படுத்திக்கொள்வதற்கான கருவியாகும்.

**117.** மனித உழைப்பின் மதிப்பை நாம் அதிகமாகப் பாராட்டும்பொழுது அதன் வெளிப்பாடாகச் சம்பளம் உயருகிறது. இதன் இறுதிக்கட்ட விளைவு விலைவாசி ஏற்றத்தில் முடிகிறது.

**118.** காலம் பொன்னானதுஎன்பது ஒரு முழுஉண்மையாகும். நேரத்தை விரயம் செய்வது பணத்தை விரயம் செய்வதற்குச் சமமாகும்.

**119.** சேமிப்பு நம்முடைய செயல்திறன் அதிகரிப்பதற்குரிய அறிகுறியாகும். பொருள் சேமிப்பு, நேரம் மற்றும் எனர்ஜி சேமிப்புஎன்பவை தம்முடைய உற்பத்தித்திறனை நேரடியாக அதிகரிக்கின்றன.

**120.** பொருளாதார மந்த நிலைஎன்பது பொருளாதார ஸிஸ்டத்தின் மேல் மக்களுக்கு நம்பிக்கை போய்விட்டதுஎன்பதைக் காட்டுகிறது. பொருளாதாரம் மீண்டும் சுறுசுறுப்பு அடைய வேண்டுமென்றால் மக்களுக்கு மீண்டும் நம்பிக்கை வர வேண்டும்.

*தொடரும்.....*

❀❀❀





# மலரும் மணமும்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

மகேஸ்வரி

**சரண்டர் ரோஜா:**

அமைதிதான் இப்பிரபஞ்ச சக்தியின் முழுமையான, பூரணமான வெளிப்படும் சக்தி. ஆனால் அது தன்னை மிகமிக அமைதியாக வெளிப்படுத்தும். அப்படிப்பட்ட அமைதியை, மல்லிகை “சாந்தி மதர், சாந்தி மதர், சாந்தி மதர்” என்று அழைப்பதன்மூலம் அனுபவித்துக்கொண்டு இருந்தாலும், A/c காற்று அவளை உடம்பு முழுவதும் தழுவ முயன்றாலும், அவளைப் பிடித்துக்கொண்டிருந்த அந்திமல்லியின் கையின் வெப்பமும், பயமும் அதைவிட அதிகமாகிக்கொண்டேயிருந்ததில், கைக்குட்டையால் முகத்தைத் துடைத்துக்கொண்டேயிருந்தாள்.

இருவரும் டாக்டரின் முன் உட்கார்ந்திருந்தார்கள். “ஒன்றும் இல்லை என்று உங்களை தைரியப்படுத்த என்னால் முடியாது. உங்கள் கணவரை, அவரின் இரத்தத்தை பரிசோதனை செய்து பார்த்ததில் எதுவும் திருப்திகரமாக இல்லை. லுக்கேமியா (Leukemia) உங்கள் கணவருக்கு வந்திருக்கிறது. இரத்தத்திலுள்ள வெள்ளை அணுவில் ஏற்படும் ஒருவிதமான நோய். வெள்ளை அணுக்கள், போன்மரோ (bone marrow) என்றழைக்கப்படும் எலும்பு மஜ்ஜைக்குள் அளவுகடந்து பெருகுவதால் ஏற்படும் புற்றுநோய். நம் உடம்பில் ஓடும் இரத்தத்தில் வெள்ளை அணுக்கள், சிவப்பணுக்கள், பிளேட்லெட்ஸ் என்ற மூன்றும் கலந்துள்ளது. ஆனால் இந்த வெள்ளை அணுக்கள், நல்லதாக உள்ள வெள்ளை அணுக்களின் தன்மையை அழிப்பதால், உடம்பிலுள்ள எதிர்ப்பு சக்தி அழிய ஆரம்பிக்கும். அத்துடன் பிராணவாயு (oxygen) சக்தியை உடம்புக்குள் எடுத்துச் செல்லும் சிவப்பணுக்களின் செயல்பாட்டுத்திறனையும் குறைக்கச் செய்யும்.

இதனால் இரத்தம் கசிய ஆரம்பித்தால் நிற்காது. உடம்பிலுள்ள எல்லா பாகங்களிலும் இரத்தம் செல்வது தடைபட ஆரம்பிக்கும். இரத்த அணுக்கள் குறையக் குறைய வலியும், வேதனையும் அளவுகடந்து உடலில் ஏற்படும். இந்த வியாதியின் முழுத் தன்மையையும் நீங்கள் அறிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக இத்தனை விவரங்களையும் கூறினேன். எங்களால் ஆன எல்லா முயற்சிகளையும் எடுக்கிறோம். நம் எல்லா சக்திகளுக்கும் மேலே ஒரு பிரபஞ்ச சக்தி உள்ளது. அதன் கையில் பொறுப்பை ஒப்படைப்போம்'' என்ற டாக்டரின் வார்த்தைகள் அந்திமல்லியின் மூளைக்குள் மெதுவாக ஊர்ந்து செல்ல ஆரம்பித்தது. அதே சமயத்தில் அவளின் அடிவயிற்றில் இருந்து மென்மையான குரலில் 'மதர்' என்ற வார்த்தை தானாகவே கிளம்பி, அவளைச் சுற்றிக் கவசமாகச் சூழ்ந்துகொண்டேயிருந்ததை உணர ஆரம்பித்தாள்.

பயத்தின் உச்சக்கட்டத்திலிருந்த அந்திமல்லி, துணையென நம்பி வந்தவனின் உயிருக்கு ஆபத்தென்ற செய்தியைக் கேட்டவுடன் இன்னும் அதிகமாகப் பயந்திருக்க வேண்டும். அன்னை தம் திருவிளையாடலின் பேரருளை அந்திமல்லிக்குக் கொடுக்க விரும்பினார். திருவுருமாற்றத்தின் பலனை அவளுக்குத் தெரியாமலேயே கொடுத்து, அவளைத் தம் குழந்தை ஆக்கிக்கொண்டார். கொடுப்பது அன்னை; பெறுவது அந்திமல்லி அல்லவா! தனக்கேற்ற விதத்தில் பெற்றுக்கொள்வது மனிதத் தன்மையல்லவா!

➳ ➳ ➳

“அந்திமல்லி, என்னை விட்டுப் போகாதே! என்னுடனேயே இரு. எனக்குப் பயமாக இருக்கிறது. எனக்கு என்னவென்று தெரியவில்லை. ஒரே அசதியாக இருக்கின்றது. உடம்பெல்லாம் வலிக்கின்றது. எலும்புக்குள் யாரோ கையை விட்டு பிசைவதுபோல் இருக்கிறது. என் கையைப் பிடித்துக் கொள்” என்று புலம்பிகொண்டே சந்திரன், மருந்தின் மயக்கத்தில் அவள் கையை விட்டான்.

“அந்திமல்லி, டாக்டர் கட்டச் சொன்ன பணத்தை நான் கட்டிவிட்டேன். ATMஇல் 25,000/- பணம் எடுத்திருக்கிறேன். உன் கையில் வைத்துக் கொள். அக்காவிடம் சொல்லி Add-on Card ஒன்று வாங்கி உன்னிடம் கொடுக்கின்றேன். எதற்கும் கவலைப்படாதே, அன்னையிருக்கிறார்கள்”.



“நிச்சயமாக! அன்னை மட்டும்தான் இருக்கிறார்கள். என் பயம்தான் இதைக் கொண்டுவந்திருக்கிறது. அன்றைக்கு ரோஜாக்கா சொன்னார்கள், ‘அன்னையிடம் பயம் வேண்டாம்என்று கேட்காதே; தைரியம் வேண்டும் என்று கேள். நேர்மறையாகப் பிரார்த்தனை செய்’ என்று. எனக்கு பயம் வேண்டாம்என்றுதான் பிரார்த்திக்கத் தோன்றியது. என்னிடமிருந்து சந்திரனுக்கு அது transferஆகி விட்டதென்று நினைக்கிறேன். இனி எதையும் நான் கேட்கப்போவதில்லை. அவர்களுக்கு இந்தச் சமயத்தில் எனக்கு எதைக் கொடுக்க வேண்டும்என்று தெரியும். என்னைப் பற்றியே எனக்கு எதுவும் தெரியாது. வேண்டும், தேவையென்பவற்றையெல்லாம் அவர்களிடமே ஒப்படைத்துவிடுகிறேன். சரண்டர் ரோஸ் என்ற மலர் ஒன்று இருப்பதாக முகுந்தன் சார் சொன்னார். அதை எனக்குக் கொண்டுவந்து கொடு. எனக்காக அன்னையிடம் சரணடையக்கூடத் தெரியாது. இந்த மலரை அன்னைக்குச் சார்த்துவதன்மூலமாக இம்மலரின் குணம் எனக்கும் வரட்டும். நீ கவலைப்படாதே! ரோஜாக்காவிடம் விஷயத்தைச் சொல்லிவிடு”.

➳ ➳ ➳

“டாக்டர் இவ்வளவு விவரமாகச் சொல்லாவிட்டால் சந்திரனின் வியாதி பற்றி முழுமையாகத் தெரியாது” என்றாள் மல்லிகை.

“நீ படித்திருக்கிறாய் அல்லவா, அன்னைக்கு ஒரு முறை ஜுரம் வந்து, முழுவிவரமும் தெரியாத காரணத்தினால், பகவானுடைய சக்தியும் செயல்படாமல் இருந்தது; கல்கத்தாவிலிருந்து வந்த டாக்டர் ஜுரத்தின் பெயரை பகவானிடம் சொல்லியமாத்திரத்தில், டாக்டர் குளித்துவிட்டு வருவதற்குள், அன்னையின் ஜுரம் முழுமையாகக் குணமாகிவிட்டதைப் பற்றி. அதனால் சந்திரனும் குணமாகிவிடுவார். அந்திமல்லிக்குத் துணையாக நீயும் ஆஸ்பத்திரியில் இருக்கவேண்டுமென்றால் இரு. நானும் வருகிறேன்” என்று கூறினாள் முல்லை.

“அக்கா, அந்திமல்லி இப்பொழுது மிகவும் தைரியசாலி ஆகிவிட்டாள். அவளுக்கு நம் துணையைவிட அன்னையின் பேரருள் துணையாக இருக்கிறது. நாம் யாரும் போய் பார்க்க வேண்டிய தேவையேயில்லை”.

“மல்லிகை சொல்வதுதான் சரி. உடம்பு சரியில்லையென்றால் போய் பார்க்க வேண்டும் என்பது பழைய முறை. ஆனால் அன்னையின் முறையோ,

அன்னையின் அருள் முழுமையாகச் செயல்பட விரும்பினால், எந்தவொரு மனித குறுக்கீடும் இருக்கக்கூடாது. நாம் போனால் 'விசாரிப்பு' என்ற பெயரில் அவர்களை, தைரியப்படுத்துவதற்குப் பதிலாக அதைரியப்படுத்தி விடுவோம். நமக்குதான் எதை, எங்கு பேசக்கூடாதுஎன்பது தெரியாதே! அன்னை அந்திமல்லியுடன், சந்திரனுடன் இருக்க வேண்டும்என்று மட்டும் தீவிரமாக நல்லெண்ணத்துடன் நினைப்போம். மற்றதை அன்னை பார்த்துக் கொள்வார்" என்றாள் ரோஜா.

➢ ➢ ➢

சந்திரனின் முகம் தெளிவாக இருந்தது. ஜுரம் முழுவதுமாக இறங்கி விட்டிருந்தது.

"Mrs.சந்திரன், இன்றைக்கு உங்கள் கணவரின் சிவப்பு இரத்த அணுக்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. சாதாரணமாக இவ்வாறு நடக்காது. குறையுமேயொழிய அதிகரிக்க வாய்ப்பில்லை. இருந்தும் மாற்றம் இருக்கிறது. உங்கள் நம்பிக்கைக்குப் பலன் இருக்கிறது. தொடர்ந்து நம்பிக்கையுடன் இருங்கள்" என்றார் டாக்டர்.

"ஓர் இன்ஜெக்ஷன் (injection) USAவிலிருந்து அனுப்பச் சொல்லி இருக்கிறேன். அதை தினமும் ஒரு முறை போட்டால் பலன் இன்னும் கொஞ்சம் விரைவாக இருக்கும். விலை சற்று அதிகம், பரவாயில்லையா?"

"டாக்டர், உங்களால் ஆன முழு முயற்சியை எடுங்கள். என்கூட இருப்பவர்கள் எனக்கு எல்லா உதவிகளும் செய்யத் தயாராக இருக்கிறார்கள்" என்றாள் அந்திமல்லி.

➢ ➢ ➢

"ரோஜாக்கா! இன்றைக்கு மனம் சற்று கலக்கமாக இருக்கிறது. அதனால்தான் இங்கு வந்துவிட்டேன். முகுந்தன் சாரை இன்றைக்கு மட்டும் சந்திரனைப் பார்த்துக்கொள்ளச் சொல்ல முடியுமா?"

"தாராளமாக" என்றார் முகுந்தன்.

➢ ➢ ➢



"அந்திமல்லி, அந்திமல்லி, உடனே வருகிறாயா? நாம் இருவரும் ஆஸ்பத்திரிக்குச் செல்ல வேண்டும்" என்ற ரோஜாவின் குரல் படபடத்தது.

கையிலிருந்த 'சாவித்ரி'யை இறுகப் பிடித்த அந்திமல்லியின் கைகள் அன்னையின் முகத்தை, உடலைத் தழுவ ஆரம்பித்தன. பிரார்த்தனை என்று எதுவுமில்லாமல் அன்னையை இறுகப் பற்றிக்கொண்டாள். என்ன செய்வது, ஏது செய்வதுஎன்று ஒன்றுமே புரியாத நிலை. வாயிலிருந்து, ஏன் மனதிலிருந்துகூட எந்தவோர் எண்ணமுமற்ற அமைதியான, சூன்யமான நிலையிலிருந்தாள். கண்கள் அன்னையின் கண்களை உற்றுப் பார்த்தன. தன்னையே பிய்த்தெடுத்து அன்னையின்மீது பதிக்க முடியுமா என்று முயன்றுகொண்டேயிருந்தாள். தன்னிலையிலிருந்து மேலே மேலே போய்க்கொண்டேயிருந்தாள். வெட்டவெளியில், ஆதி அந்தமற்ற, சப்தங்களே இல்லாத நிசப்தத்தில் மெல்லிய தங்கநிற ரேகையொன்று புறப்பட்டு, அவளை மெதுவாகப் போர்த்த ஆரம்பித்தது. கரைந்து, கரைந்து ஒன்றுமிலாத நிலைக்குள் போன அந்திமல்லியை ரோஜாவின் குரல் நிதர்சனம் என்னவென்பதை படம்பிடித்துக் காட்டியது.

➢ ➢ ➢

"ஏனக்கா, அந்திமல்லியின் முகம் தங்கமாக ஜொலிக்கிறது. ஆனால், சந்திரனின் நிலையோ மோசமாகிக்கொண்டேயிருக்கிறது. அன்றைக்கு சந்திரனைப் பார்த்துவிட்டு பயந்துவிட்டேன். எத்தனை மெஷின்கள்! அதில்தான் அவரின் உயிரே இருப்பதுபோல் டாக்டர்களின் பேச்சு, பார்வை. ஒன்றும் புரியவில்லை. அன்னை நல்லது மட்டுமே செய்வார்என்று தெளிவாகப் புரிகிறது. ஆனால் இவற்றையெல்லாம் பார்க்கும்பொழுது, மனிதன் விரும்பியதைத்தான் தெய்வம் கொடுக்கிறதென்றால், இம்மாதிரியான ஆசையைக்கூடவா மனிதன் கேட்பான்என்று சந்தேகமாக இருக்கிறது; குழப்பமாகவும் இருக்கிறது. அந்திமல்லி, 'சரணாகதி அடைந்துவிட்டேன். இனி எனக்குக் கவலையில்லை' என்று தீர்மானமாகச் சொல்கின்றாள். அவளின் நம்பிக்கை என்னை மெய்சிலிர்க்க வைக்கிறது. 'எனக்கு ஏன் இந்தளவு நம்பிக்கை வரவில்லை?' என்ற கேள்வி என் மனதில் எழுகின்றது. என்னவென்று சொல்லத் தெரியவில்லை. சில கேள்விகளுக்குப் பதில் கிடையாதா?" புலம்பிக்கொண்டிருந்தாள் மல்லிகை.

“தூய்மைக்கே சந்தேகமா! வேண்டாம்” என்றார் முகுந்தன்.

“நிச்சயம் அன்னை சோதிக்கமாட்டார். இதில் வேறு ஏதாவது விஷயம் நமக்குத் தெரியாமல் இருக்கலாம். ஆனால், அந்திமல்லியின் நம்பிக்கைக்கு வெற்றி கிடைக்கும். எதுவும் அவளை விட்டுப் போகாது. எனக்கு அவளின் சரணாகதி பூரணமாகத் தெரிகிறது. அதனால் நீ மனத்தைப் போட்டுக் குழப்பிக்கொள்ளாதே. அமைதியாக இருப்பதுதான் அந்திமல்லிக்கும், சந்திரனுக்கும் நாம் செய்யும் உதவி” என்றாள் ரோஜா.

➳ ➳ ➳

“சந்திரா, நம் குலதெய்வம் கோயிலுக்குச் சென்று கோழி வெட்டி, படையல் போட்டு விபூதி வாங்கி வந்திருக்கிறேன். இதை பூசிக்கொண்டால் எல்லாம் சரியாகிவிடும்’’ பேசிக்கொண்டே தெய்வநாயகி நெற்றியில் வைத்தாள்.

“வேண்டாம்மா! அந்திமல்லிக்குத் தெரிந்தால் கோபப்படுவாள்”.

“அவள் என்னடா இப்பொழுது வந்தவள். நீ என் பிள்ளை. எனக்குத் தான் முதல் சொந்தம். நான் பார்த்துக்கொள்கிறேன், அவள் வரட்டும்”.

முகுந்தன் உள்ளே நுழைந்தார்.

➳ ➳ ➳

“அந்திமல்லி, நான் சொல்கிறேன் என்று தப்பாக எடுத்துக்கொள்ளாதே. ஒரு விஷயம்” என்று மல்லிகை ஆரம்பித்தாள்.

“மல்லிகை, நீ அன்றைக்கு ஒரு நாள் சொன்னாயே, பெற்றோர்களைப் பற்றி. அவர்கள் இருவரிடமும் மானசீகமாக ரோஜாக்கா வீட்டு மதர் ரூமில் சாஷ்டாங்க நமஸ்காரம் செய்து, மன்னிப்புக் கேட்டுவிட்டேன். அதற்குபின் அவரின் இரத்த அணுக்களின் எண்ணிக்கை கூடியது. அதனால் நீ இப்பொழுது எதைச் சொன்னாலும் சரி, மனப்பூர்வமாகச் செய்கிறேன், சொல்”.

“இல்லை, அன்றைக்கு முகுந்தன் மாமா ஆஸ்பத்திரிக்குச் சென்ற பொழுது சந்திரனின் அம்மா அவர் நெற்றியில் ஏதோ பூசுவதைப் பார்த்து இருக்கின்றார். மாமாவுக்கும், சந்திரனுக்கும் அவ்வளவு பழக்கமில்லையே. அதனால் அவரிடம் ஒன்றும் சொல்லவில்லை. அதனால்தான் உன்னிடம்.....”



“இதோ பார், அன்னையின் சக்தி பிரபஞ்சத்தைத் தோற்றுவித்த பிரம்மாண்ட சக்தி. அந்த சக்தியிடம் நீ சரணடைந்திருக்கிறாய். அந்த சக்தி எதையும் சாதிக்கும். அதற்கு எந்தவொரு பகைமையோ, துவேஷமோ, நல்லது-கெட்டதோ கிடையாது. அவற்றையெல்லாம் கடந்து நின்று, பிரபஞ்சம் முழுவதும் பரவி நின்று ஆட்சி செய்யும் சுத்த சக்தி. ஆனாலும் அதுவும் நமக்கேற்றாற்போல்தான் செயல்படும். நாம் குறுகி/குறுக்கிவிட்டோம் என்றால் அது நம்முடைய தவறுதானேயொழிய அன்னையின் சக்தியின் வீரியம் குறைந்ததுஎன்று அர்த்தமன்று. நீ சந்திரனிடம் பேசிப் பார். உன் சரணாகதியின் சக்தி மகத்தானது. சாவித்ரியைப்போல் நீயும் எமனுடன் போராடுகின்றாய்; நீ ஜெயிப்பாய். அதில் எந்தவொரு சந்தேகமும் இல்லை”.

‘‘மல்லிகை, சந்திரனிடம் பேசுவதைவிட அன்னையிடம் இந்த விஷயத்தைக் கூறிவிட்டு, சந்திரனின் அம்மாவின் பிடியிலிருந்து அவரை விடுவிக்க வேண்டுமெனக் கேட்கப்போகிறேன். நேரில் போய் பேசினால், அவர்கள் என்னை அவமானப்படுத்துவார்கள்; கேவலமாகப் பேசுவார்கள். எனக்கும் மனது மயங்கும். உணர்ச்சியின் வேகம் என்னைவிட வேகமாகச் செயல்பட்டால், நான் தோற்றுவிடுவேன். அன்னையை அங்கு தானாகவே விலக்கிவிட்டு, ‘என்’ பின்னால் போய்விடுவேன். அது சரியன்று. என் சரணாகதி முழுமையாக என்றென்றும் மாறாமல் இருக்க வேண்டும். அதுதான் என் பிரார்த்தனை”.

➳ ➳ ➳

“சாரி மேடம். எங்களால் ஆன முயற்சிகளைச் செய்துவிட்டோம். கவுண்டிங் குறைவதும், அதிகமாவதுமாக இருக்கிறது. மருந்துகளை மாற்றி மாற்றிக் கொடுத்தும் தெளியவில்லை’’ என்று கூறிய டாக்டர், அந்திமல்லியிடம், “உங்கள் ரூமில் அன்னை போட்டோவைப் பார்த்தேன். சரண்டர் ரோஸ் வைத்திருப்பதையும் கண்டேன். நானும் அன்னையை ஏற்றுக்கொண்டவன். அன்னையை இறுகப் பற்றிக்கொள்ளுங்கள். எங்களால் முடியாததை அவர் முடித்துவைப்பார். Best of Luck” என்றார்.

“Thank you, Doctor.”

"சந்திரன், நாம் இருவருமே பெற்றோர்களை எதிர்த்துதான் திருமணம் செய்துகொண்டோம். இப்பொழுது உங்கள் அம்மா வந்து பார்ப்பதாகக் கேள்விப்பட்டேன். எப்பொழுதிலிருந்துஎன்று நீங்கள் சொல்லவில்லை. உங்கள் விருப்பம்தான் என்னுடைய விருப்பமும். அவர்களைப் போய் பார்த்து அல்லது அவர்கள் இங்கே வந்து தங்க வேண்டும்என்று நீங்கள் விரும்பினால் சொல்லுங்கள்".

"இல்லை அந்திமல்லி. நடந்தவற்றையெல்லாம் சொல்லிவிடுகிறேன். எனக்கும் பிடிக்கவில்லை. ஆனால் அவர்களை நேரில் பார்த்தவுடன் என்னால் எதுவும் சொல்வதற்கு தைரியம் வரவில்லை. அப்பாவின் ஆப்பரேஷனுக்குப் பணம் கொடுத்தேன். அன்றைக்கு மல்லிகை கொடுத்த அன்னை புத்தகம் ஒன்றில், 'புஷ்பாஞ்சலி' என்று நினைக்கிறேன், 'வாழ்வின் எதிரொலி' கட்டுரையைப் படித்தேன். அதிலுள்ள விஷயங்களை எனக்கு நடந்தவற்றிற்குப் பொருத்திப் பார்த்ததில், அவர்களுடன் தொடர்பு கொண்டதால்என்பது புரிகிறது. ஆனால் என்னால் முடியவில்லையே! ஆதரவு என்று கேட்கும்பொழுது எப்படி மறுப்பது! இந்தளவிற்கு நான் இருக்கிறேன்என்றால், அதற்கு காரணம் அவர்கள்தானே!"

''உங்கள் உயிருக்கே ஆபத்து வருகின்றதே! அவர்கள் தகுதி உடையவர்களென்றால், நல்லெண்ணம் கொண்டவர்களாக இருந்தால், உங்களுக்குப் பிரச்சினை எதுவுமே வந்து இருக்காதே!"

"சரி அந்திமல்லி. உயிரைக் கொடுத்தவர்களே உயிரை எடுக்கின்றார்கள் போலிருக்கிறது".

இனி சந்திரனிடம் பேசி பயனில்லை என்பதை உணர்ந்த அந்திமல்லி, நடந்ததை அன்னைக்குக் காணிக்கையாக்கினாள்.

''ரோஜாக்கா, ஜீவ மரண போராட்டத்திலும் மனிதன் தனக்கு பிடித்ததைச் செய்வதற்குத்தான் துடிப்பான்என்று படித்திருக்கிறேன். இப்பொழுது சந்திரனை நேரில் பார்க்கிறேன்".

"மல்லிகை, மனமாற்ற பூவை - மரமல்லி - அந்திமல்லியிடம் கொடு. இன்றைக்கு நிறைய மனமாற்ற பூ கிடைத்திருக்கிறது".

➳➳➳



*"அம்மா, முதன்முதலாக சந்திரனைப் பார்த்ததிலிருந்து இன்றுவரை நடந்த எல்லா விஷயங்களையும் உங்கள் திருவடியில் சமர்ப்பணம் செய்கிறேன்.*

*என்னில் எந்த குறை சந்திரனின் மாற்றத்திற்குக் காரணமாக இருக்கிறதோ, அதை எனக்குக் காட்டுங்கள்.*

*என் பிடிவாதம்தான் சரணாகதியைப் பூரணமாகச் செயல்பட வைக்காமல் தடையாக இருந்தால், என் பிடிவாதத்தையும் உங்கள் திருவடிகளில் காணிக்கையாக்குகிறேன்.*

*எனக்கு துணை, ஆதரவு, எல்லாமே நீங்கள் மட்டும்தான்.*

*என்னிலுள்ள நீங்கள் வெற்றி பெற வேண்டும். 'நான்' தோல்வியடைய வேண்டும்.*

***Thy will be done in my life Mother and not my will Mother.***"

கரைந்து, கரைந்து, உருகி, உருகி, தன்னுள்ளேயே மறைந்து, தன்னிலிருந்தே விடுதலையாகி, விடை காண முடியாத, பாதை தெரியாத, நீண்ட, நெடிய, முதலும், முடிவுமற்ற வைரஒளியுள் அந்தமல்லி சென்று கொண்டேயிருந்தாள்; தன்னை மறந்தாள்; தன்னிலையை இழந்தாள்; காலம் அவளை விட்டு விலகியது; எந்த இடத்தில் இருக்கிறோம், எந்த இடத்தை நோக்கிச் செல்கிறோம்என்ற எதிர்பார்ப்பு இல்லாத, திக்குத் தெரியாத பேரிடத்தில் ஐக்கியமாகிக்கொண்டேயிருந்தாள்.

➳➳➳

"சந்திரா, உங்கள் அய்யனுக்கு உடம்பு சரியாகிவிட்டது. நாங்கள் ஊருக்குப் போகிறோம். உன் உடம்பு சரியானால் ஊருக்கு வா. ஆடு, கோழி வெட்டி பெரியதாக படையல் ஒன்றை குலதெய்வத்திற்குச் செய்து விட்டால், அய்யனுக்கு எதுவும் வாராதெனச் சொல்கிறார்கள். உன் பெண்டாட்டியை விட்டுவிட்டு வந்தால்தான் எங்களுக்கு எந்தவொரு கெடுதலும் வாராது. அவளை விட்டுவிடு. அவள் சம்பாதிக்கிறாள். பார்த்துக் கொள்வாள்'' பேசிக்கொண்டே மகன் கையில் பணியாரத்தைக் கொடுத்தாள் தெய்வநாயகி.

"என்னால் சாப்பிட முடியாதம்மா" என்று ஈனஸ்வரத்தில் முனங்கினான் சந்திரன்.

"அப்படியா, கொடு, நானே சாப்பிட்டுக்கொள்கிறேன்".

"ஆமாம், இன்னும் எத்தனை நாட்களுக்கு இந்த ஆஸ்பத்திரியில் இருக்க வேண்டும். செலவு அதிகமாகின்ற இடமாக இருக்கிறது. யார் பணம் கட்டுவார்கள்? நீ பேசாமல் என்னுடன் வந்துவிடு. நம் பூசாரியய்யா கையால் விபூதி வைத்துக்கொண்டால் சரியாகிவிடும். அப்படியில்லை என்றாலும், நம் வீட்டிலேயே எது வேண்டுமானாலும் ஆகட்டும்" என்றாள்.

சந்திரன் வெறித்து பார்த்துக்கொண்டேயிருந்தான். அவனால் பேச முடியவில்லை. இப்படியும் ஒரு தாய் இருக்க முடியுமா! இவர்களுக்கா நன்றியுடன் இருக்க வேண்டும். 'பாகுபாடு' பார்க்கத் தெரியவில்லை தனக்கு, என்பதை உணர்ந்தவன், தன் மனத்திலிருந்த பாசம் என்பதை அறுக்க ஆரம்பித்தான்.

➼➼➼

''அந்திமல்லி, இனி உன்னை 'சாவித்ரி' என்றுதான் கூப்பிடப் போகின்றேன்" என்றாள் மல்லிகை.

"சாவித்ரியை படிப்பதைபோல், அந்திமல்லியின் வாழ்வில் நடந்தவை-களை ஒரு முறை நினைத்துப் பார்த்தால், அவளின் சரணாகதி நமக்கும் கிடைத்துவிடும், இல்லையா ரோஜா" என்ற முகுந்தன் தட்டு நிறைய சரண்டர் ரோஜாக்களை அந்திமல்லி, சந்திரன் கைகளில் கொடுத்தார்.

*தொடரும்....*

❀❀❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

தன்னையறியாமல் சுபாவத்திற்கெதிராக மனிதன் செயல்-பட்டால் - கருமியின் தாராளம் - உணர்வு அருளைப் பெறத் தயாராக இருக்கிறது எனப் பொருள்.

***சுபாவம் மாறும் நிலையில் அருளின் வாயிலுக்கு வருகிறோம்.***



# யோக வாழ்க்கை விளக்கம் V

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

**905) தன்னையே ஒளித்து, மீண்டும் காண்பதே இருப்பதில் பேரின்பம் என்கிறார் பகவான். தடங்கலைத் தாண்டி வருவது இன்பம் துய்க்க, பெரிய வாய்ப்புகளை அளிக்கிறது. இதைத் தெரிந்தும் செய்யலாம், தெரியாமலும் செய்யலாம். நம் உரிமைகளைக் குழந்தைகள், மனைவி, கீழுள்ளவர்-களுக்குக் கொடுத்து, அதை ஒரு கொள்கையாகப் பின்பற்றி, அவர்கள் செயலை அனுபவிப்பது இம்முறையின் சிகரம். அதைவிட உயர்ந்தது அவர்கள் தவறாக அவ்வுரிமையைப் பயன்படுத்துவதை நாம் ரசிப்பது. அதன் ஆன்மீக உச்சம் ஈஸ்வரன் சக்திக்குச் சரணடைவதாகும். பிரச்சினைகளும் சிரமங்களும் நாம் கண்மூடித்தனமான லீலையில் ஈடுபட்ட-தைக் குறிக்கும்.**

***குடும்பத்தினர் தவறு ருசிக்குமானால் மனிதன் பிரம்மமாகிறான்.***

**இறைவன் தன்னை ஒளிப்பது, தன் சுதந்திரத்தை தானே விரும்பி இழப்பது.**

**சுதந்திரத்தை இழக்கும் சுதந்திரம் முடிவான சுதந்திரம்.**

**அதுவே அதிகபட்ச ஆனந்தம் பெறும் கருவி.**

**இதுவரை உலகிலில்லாத கருத்து இது.**

**தலைகீழ் மாற்றத்தின் உச்சம் இது.**

**உச்சக்கட்ட சுதந்திரம் உச்சக்கட்ட ஆனந்தம் தருவது.**

**இவை தத்துவம்.**

**நடைமுறையை வீட்டிலும், ஆபீசிலும் காணலாம்.**

**மேலுள்ள அதிகாரி மிரட்ட, விரட்ட சிறிதளவு இடம் கொடுத்தால் வாழ்க்கை சிரமமாகும்.**

கீழுள்ளவர்க்கு அவரிஷ்டப்படி நடக்க இடமளிப்பது வாழ்க்கை நரகமாகும்.

இரு பாலார்க்கும் அதுபோன்ற சுதந்திரம் கொடுத்தபின்
வாழ்க்கை செவ்வனே நடக்க நமக்கு
அகம் தெளிவான வலிமை பெற்றிருக்க வேண்டும்.

பள்ளியில் குழந்தைகளைக் கண்டிக்காவிட்டால் எந்தக் குழந்தையும் இடத்தில் இருக்காது. தானே அடங்க 3, 4 வருஷமாகும்.

அதுவரை நமக்குப் பொறுமையிருக்காது.

தானே கற்ற கட்டுப்பாடு ஆயுள்வரை நீடிக்கும்; தொடர்ந்து வளரும்.

குழந்தை தாயாரை தன் அண்ணன், தங்கை தொட சம்மதிக்காது.

அச்சுபாவங்கள் மனிதகுலத்தின் அஸ்திவாரம்.

அந்த அஸ்திவாரத்தில் நமக்குத் தூய்மை வேண்டும்.

தூய்மை போதாது; வலிமை வேண்டும்.

இரண்டும் இருந்தால் கொஞ்ச நாளைக்குத்தான் வரும்.

இரண்டும் அஸ்திவாரத்தில் வேர்விட்டு வளர வேண்டும்.

அது substance பொருளில் வளரும் ஆன்மா எழுவதாகும்.

எழுந்தது பூர்த்தியானால் அற்புதம் மலரும்.

இது போன்ற சுதந்திரத்தைக் கொடுத்து, பிறகு சமாளிக்க முடியாவிட்டால் மீண்டும் திருப்பி வாங்க முடியாது.

முன்னேறாமலிருக்கலாம்;
முன் வைத்த காலை பின் வைப்பது சரியாகாது.

அதனால் சுதந்திரம் கொடுக்க தகுதி வரும்வரை அதைச் செய்யக்கூடாது.

அன்னையும், பகவானும் ஆசிரமத்தை அப்படியே நடத்தினர்.

ஆயிரம் புகார் வந்தாலும் அன்னை ஏற்கமாட்டார், "அவரவரே அறியா விட்டால், அது அறிந்ததாகாது" என்பார்.

இது அற்புதத்தை அவனியில் காணும் பாதை.

❀❀❀



906) மனிதன் நாடகத்தில் தன் பங்கை நிறைவேற்றுகிறான். அதைத் தன்னையறியாமல் செய்கிறான். இறைவன் தன் நாடகத்தை, தன்னையுணர்ந்து நடிக்கிறான். மனிதனைப் பொருத்தவரை மனிதனும், வாழ்வும் கண்மூடியுள்ளனர். இறைவன் விஷயத்தில் மனிதன் தன்னை அறியவில்லை என்றால் இறைவன் தன்னை அறிவான். இருவரும் நம்மை அறிந்தால் நாடகம் முடியும்.

*மனிதனும், இறைவனும் வாழ்வு எனும் நாடகத்தை அறிந்தால் நாடகம் முடியும்.*

- ✡ தன்னை மறந்து செயல்படுவது பரவயப்படுவது.
- ✡ அந்நிலையில் செயல் அதிஅற்புதமாக இருக்கும்.
- ✡ கலைஞன், கவிஞன், தபஸ்வி சாதிப்பவை அவை.
- ✡ நாடகத்தில் நடிகன் தன்னை மறந்த நிலை அவனது உச்சக்கட்ட நடிப்பு.

Self-conscious தன்னையறிந்து அதேபோல் ஒருவன் நடிக்க வேண்டுமானால் அவன் தெய்வ நிலையைக் கடந்திருக்க வேண்டும்.

பாடகன் பாடும்பொழுது தாளம் போடுவதற்கும், உடலை ஆர்ப்பாட்டமாக அசைப்பதற்கும், முகபாவங்களை பல வகைகளாக மாற்றுவதற்கும் அவர்கள் பாஷை 'சேஷ்டை'.

ஒரு சிறந்த பாடகன், சேஷ்டையின்றி சிறப்பாகப் பாடுவது தெய்வம் பாடுவதாகும்.

சாதாரணமாக சேஷ்டை நின்றால் பாட்டு பாடுவதாக இருக்காது; படிப்பதாக இருக்கும்.

கோபம் வரும்பொழுது நாம் கோபத்திற்கு அடிமையாகிறோம்.

நாமே கோபமாகிறோம்.

அந்நிகழ்ச்சி முடிந்தபிறகும் கோபம் போகாது; போக நெடுநேரமாகும்.

கோபமாகப் பேசி முடித்த அடுத்த நிமிஷம் சிரித்துப் பேச முடியுமானால், கோபம் நமக்குக் கட்டுப்பட்டதாகும். அதை ரௌத்திரம் என்பார்கள்.

நரசிம்மவதாரமும் ரௌத்திரத்திலிருந்து மீள 6 மாதமாயிற்று.

✡ **இறைவனின் லீலை, இறைவனின் நாடகம்.**

**நம்மால் chess செஸ் இருபுறமும் நாமே உட்கார்ந்து விளையாட முடியாது.**

**இறைவனால் அது முடியும்.**

**அடுத்த பக்கம் போனபின் இந்தப் பக்கமிருந்தது மறந்துபோகும்.**

**மனிதனால் தன்னையறிந்து நடக்க முடியாது.**

**இறைவனால் தன்னையறிந்து நடக்க முடியும்.**

**மனிதனும், இறைவன் லீலையில், இறைவனைப்போல் தன்னையறிந்து நடிக்க முடியுமானால், நாடகம் - evolution - முடியும்.**

**மனிதன் இறைவனாவதே இந்த யோக இலட்சியம்என அதையே கூறுகிறார்.**

**பற்றற்றான் தாளினைப் பற்றுக பற்று விடற்கு என்பது இதுவே.**

✡ **கோபத்திலிருந்து விலகி கோபப்படுவதுபோல்,**

**பிரியத்திலிருந்து விலகிப் பிரியப்பட்டால்,**

**அனைத்திலிருந்தும் விலகி அனைத்திலும் ஈடுபடுவது இறைவனைப் பற்றுவது.**

**அற்புதம், அக்கட்டத்தில் இறைவன் வாழ்வாக மலர்வது.**

**ஒரு வினாடி அது நம் வாழ்வில் நடக்க நாம் செய்யக்கூடியது**

**சத்தியத்தை 1 நாளாவது 100 பங்கு மேற்கொள்வதாகும்.**

**சத்தியஜீவியத்தையடைய சத்தியம் உதவும்.**

*தொடரும்.....*

❀❀❀

## ஜீவிய மணி

**அகந்தையின் ஆதி சக்தி; ஜீவியமன்று.**



# யோகசக்தி வாழ்வில் பலிக்கும் முறைகள்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

**62. கொடுமையை சந்தோஷமாக ஏற்றுக்கொள்.**

சுயநலமி, பேய், கொடுமை ஆகியவற்றுக்குச் சட்டம் ஒன்றே.

வருபவை நமக்குரியவை என்பதே அச்சட்டம்.

ஆத்மா ஆழத்தில் புதைந்திருந்தால் அது வெளிவரக் கொடுமை அவசியம்.

நம்மைக் கொடுமை செய்பவர் அச்செயலுக்குக் கருவி.

**அச்செயல் அருள்.**

சுயநலமி, பேய், கொடுமைக்குச் சட்டம் ஒன்றானாலும் அவை செயலில் வேறுபடும்.

தோசை, இட்லி, உப்புமா அரிசியால் செய்யப்பட்டிருந்தாலும் ருசி வேறு, பாகம் வேறு.

சுயநலமிக்குத் தன்னை மட்டும் தெரியும்; வெட்கமிருக்காது.

பேய் பயங்கரமாகச் செயல்படும்.

கொடுமை செய்பவருக்கு ஈவு, இரக்கம் இருக்காது; தீவிரம் இருக்கும்.

**அன்பு செலுத்த வேண்டியவர் கொடுமை செய்வதை மனம் ஏற்க முடியாது; உயிரும், உடலும் பதைபதைக்கும்.**

இப்பதைபதைப்புமூலம் புதைந்துள்ள ஆத்மா வெளிவருகிறது.

8 தலைகீழ் மாற்றங்களில் இது 5 முதல் 8 வரை ஓரிடத்தில் அமையும்.

அன்பாகத் தேடிவரும் குழந்தையை ஆத்திரமாக அடித்த தாயாரை அன்றே அக்குழந்தை மறந்துவிட்டது. கடைசி நேரம் அக்குழந்தை அருகிலிருக்க முடியவில்லை. கொடுமையை ஏற்ற ஆத்மா அன்றே தாயார் முகத்தில் விழிக்கக் கூடாதுஎன முடிவு செய்துவிட்டது, வாராத மகளுக்கே தெரியாது.

கொடுமைக்கு ஆளான குழந்தைகள் கடைசி நேரத்தில் கொடுமை

செய்தவரருகில் இருக்கமாட்டார்கள்என்பது பொதுச்சட்டம்.

இந்த ஆன்மீக உண்மை எட்டிக்காய்.

கேட்கவும் மனம் சம்மதிக்காது.

உலகில் அன்பில்லை, ஆதாயம் மட்டுமிருக்கிறதுஎன்பது உண்மை.

கேட்டால் மனம் ஏற்காது.

ஏற்றால் உடலெல்லாம் கொப்புளம் வரும்; தோல் கறுத்துப்போகும்.

தோல் வியாதிக்கு இது ஓர் அடிப்படை.

மனமும் ஏற்று, செயலையும் ஏற்பது யோகம்.

ஏற்பதுடன் எரிச்சலும் படக்கூடாது.

சந்தோஷப்படும்பொழுதுதான் பலன் வரும்.

அதனால் அன்னை எவரையும் யோகம் செய்ய அழைப்பதில்லை.

இந்த ஞானம் வாழ்வை வளப்படுத்தும்; பிச்சைக்காரனைப் பெரிய கோடீஸ்வரனாக்கும், தொண்டனைத் தலைவராக்கும்.

## 63. எந்த முறையையும் தேடாதே.

எந்த முறையும் சக்திவாய்ந்தது; பெரும்பலன் தரவல்லது.

எந்த முறையையும் நாடாவிட்டால், பலன் தானே வரும். அது பெரியது என்பது ஆன்மீக உண்மை.

வசிஷ்ட கணபதி முனிக்கு காவ்ய கண்ட கணபதி எனப் பெயர்.

இவர் உமா சகஸ்ரம் எழுதியவர்; கவி.

இவருடைய சமையல்காரன் எழுதப் படிக்கத் தெரியாதவன்.

குருவின் ஞானம் அடிமனம் வழி சிஷ்யனுக்கு வந்து சேரும்.

கவி பாராயணம் செய்த வேதம், சமஸ்கிருத ஞானம் இவனிடமிருந்து தானே பிரவாகமாக வந்தன.

ஒரு கிரேக்கப் பேராசிரியர் வேலைக்காரியிடம் இதைக் கண்டார்.

இவர்கள் எந்த முறையையும் நாடவில்லை, கற்க முயலவில்லை.

ஞானம் தானே இவருள் பாய்ந்தது.

சர்ச்சிலோ, இங்கிலாந்தோ ஹிட்லரைத் தோற்கடித்திருக்க முடியாது.



பகவான் சர்ச்சிலின் தைரியத்தால் அவரைக் கருவியாகத் தேர்ந்தெடுத்-தார்.

சர்ச்சில் இந்தியச் சுதந்திரத்திற்கு பரமஎதிரி.

பகவான் சுதந்திரத்தை சூட்சுமத்தில் பெற்றவர்.

யோகசக்தியை பகவான் சர்ச்சிலுக்கு அனுப்பினார்.

வென்றது யோகம்.

சர்ச்சில் கருவி.

**இந்தியச் சுதந்திரத்தின் பரமஎதிரி, உலகச் சுதந்திரத்திற்குக் கருவியாவது ஆன்மீக நடைமுறை.**

சர்ச்சில் எந்த முறையையும் நாடி தைரியம் பெறவில்லை.

தைரியம் அவருடையது; சக்தி பகவான் அளித்தது.

வேலைக்காரர்கள் மொழி பயில்வது இவ்வழி.

முறை பலன் தரும்.

பெரிய முறை பெரிய பலன் தரும்.

முறைகளைக் கைவிட்டால் உலகம் அறியாத பலன் எழும்.

ஆப்பிளைக் கண்ட நியூட்டனோ, பாத்ரூமிலிருந்த ஆர்க்கிமிடீஸோ, $E = MC^2$ என்று கூறிய ஐன்ஸ்டீனோ எந்த முறைகளாலும் இவற்றைக் கண்டுபிடிக்கவில்லை.

இராமானுஜம் எழுதிய 4 நோட்டுகளில் எதுவும் அவர் படித்த இன்டர்மீடியட் படிப்பால் வரவில்லை.

உலகத்திற்குரியது முறை.

முறைகளைக் கடப்பது உலகைத் தாண்டிச் செல்வது.

## 64. சுறுசுறுப்பில் அமைதி வேண்டும்.

அமைதியாக இருப்பதோ, சுறுசுறுப்பாக இருப்பதோ சிரமம்.

இரண்டில் ஒன்றைச் செய்யலாம்.

எப்படி இரண்டும் சேரும்?

அமைதியிலிருந்து சுறுசுறுப்பு எழுகிறது என்பது ஆன்மீகச் சட்டம்.

சுறுசுறுப்பு அமைதியாவது முதற்கட்டம்.

அந்த அமைதி கலையாமல் சுறுசுறுப்பு எழுந்தால் அது பெரியது.

மேடையில் விவாதம் நடந்தால் ஒருவர் ஆர்ப்பாட்டமாகப் பேசுவார்.

கூட்டம் அவரைப் பாராட்டும்.

அவர் முடித்தபின் எதிரி எழுந்து அமைதியாக, முதலில் பேசியவர் கூறியவற்றில் உள்ள தவற்றை அமைதியாகச் சுட்டிக்காட்டினால் விவாதம் இவருக்கு ஜெயிக்கும்.

அமைதிக்கு சக்தியுண்டு.

ஆர்ப்பாட்டத்திற்குத் திறனில்லை.

அமைதியினின்று எழும் சுறுசுறுப்புக்கு உச்சகட்டமான சக்தியுண்டு.

இது எப்படி சாத்தியம்என்று கேட்டவர்க்குப் பதில் கூறும் வகையில் பகவான் ஸ்ரீ அரவிந்தர், “யோகத்தில் ஓரளவு பரிச்சயம் உள்ளவரும் அமைதியின் சக்தி அபரிமிதமாக எழுவதைக் கண்டுள்ளனர்” என்கிறார்.

அனுபவம் முதிர்ந்து, நிறைந்த பின்னரே அமைதி எழும்.

அமைதி அமைதியாக இருப்பதாலேயே காரியம் நடக்கும்.

போலீஸ்காரன் துப்பாக்கியால் சுடும்பொழுது அவன் அதிகாரம் தெரியும் என்பது அவசியமில்லை.

காக்கிசட்டை போட்ட போலீஸ்காரன் ஒருவன் வந்துவிட்டாலே கூட்டம் அடங்கும்.

போலீஸ்காரனுடைய செயலற்ற நிலைக்கே சக்தியுண்டு.

அவன் செயல்படும்பொழுது சக்தி அதிகம்.

சுறுசுறுப்பு அமைதியினின்று எழுந்தால் அது பெருஞ்சக்தியாகும்.

அமைதியினின்று எழும் சுறுசுறுப்பு அதுபோல் பெரியது.

பெரிய பண்ணைகள், பெரிய உத்தியோகஸ்தர்கட்கு இந்த சக்தியுண்டு.

சீனியர் வக்கீல் எதிர்கட்சிப் பத்திரத்தைக் கையெழுத்துப் போட்டுத் திருட்டுத்தனமாக எடுத்துக்கொண்டார். இதை திரும்பப்பெற சட்டப்படி கேஸ் நடத்த 2 வருஷமாவது ஆகும். எதிரிக்கு ஜில்லா ஜட்ஜ் வேண்டியவர். அவரிடம் சொன்னார். ஜட்ஜ் வக்கீலைத் திட்டலாம்,



மிரட்டலாம், கோர்ட்டிலிருந்து விலக்குவேன்என்று கூறலாம். அவர் அமைதியாக ரிஜிஸ்தாரை வக்கீலிடம் அனுப்பினார். எதிர்கட்சிக்காரர் “என் பத்திரத்தைக் கொடுங்கள்” என்றார். பத்திரம் உடனே வந்துவிட்டது. வக்கீலுக்கு, திருடனுக்குத் தேள் கொட்டியது போலாயிற்று. ஜட்ஜின் அமைதி லேசாகச் செயல்பட்டால் பெரிய அதிகாரம் தடையின்றி செல்லும்.

## 65. ஒரு முறையைத் தேர்ந்தெடுத்து அதைச் சிறப்பாகச் செய்.

இங்கு சுமார் 100 முறைகளை எழுதியுள்ளேன்.

எதைப் படித்தாலும் செய்ய ஆசையாக இருக்கும்.

**நமக்குப் பிடித்தமான ஒரு முறையை நிதானமாகத் தேர்ந்தெடுக்க வேண்டும்.**

இங்கு அம்முறையில் கூறிய அனைத்தையும் perfect சிறப்பாகச் செய்ய வேண்டும்.

முழுப்பலன் கிடைக்கும்.

இம்முறையில் சொல்ல வேண்டியவை மேலும் ஏராளமாக உள்ளன.

அவற்றையும் தெரிந்துகொள்ளலாம். அதற்குரிய வழிகள் 3:

1) அன்னை இம்முறையைப் பற்றி எங்கெல்லாம், என்னவெல்லாம் சொல்லியிருக்கிறார்கள்எனத் தேடிக் கண்டுபிடித்து, அவற்றால் நாம் செய்ததை எப்படி உயர்த்த முடியும்என முயல்வது.

2) அருளமுதத்தில் 34 முறைகள் உள்ளன. மற்ற தமிழ்ப் புத்தகங்களில் பல இடங்களில் இம்முறை வருகிறது. அவற்றை a research student ஓர் ஆராய்ச்சி வல்லுனர்போல் படித்து, தேடிக் கண்டுபிடித்துப் பயன் பெற வேண்டும். பிறர் தேடித் தருவது பலன்தாராது. நாமே தேடுவதே பயன்தரும்.

3) இவ்விரண்டையும்விட சிறந்த முறையொன்றுண்டு. நாம் செய்த-வற்றை நினைத்து, ஆராய்ந்து, அனுபவித்து, மேலும் என்ன செய்யலாம்என இதுவரை நாம் படித்ததைக் கொண்டு கண்டுபிடித்து முறையை உயர்த்துவது முழுப்பலன் தரும்.

- ❀ பலன் வருவது நிச்சயம். அதைப் பெரும்பலனாக்கலாம்; முழுப் பலனாகவும் செய்யலாம்; வந்தது நிலைப்பதற்கும் செய்யலாம்; நிலைத்தது தொடர்ந்து உயர்வதற்கும் செய்யலாம்.
- ❀ இந்த முறையையே அன்னையாகவும் மாற்ற முடியும்.
- ❀ நமக்குச் சொந்த பழக்கங்கள் உண்டு; எதற்கும் லிமிட் உண்டு; விடாமுயற்சி அவசியம். ஒன்று முடிந்தால் அடுத்ததற்குப் போகத் தாமதிக்கக் கூடாது. 'இதெல்லாம் பார்த்தால் முடியாது' என்பன போன்று சுமார் 20 அல்லது 25 பழக்கங்கள் உள்ளன. அவற்றை நாம் தவறாது பின்பற்றுகிறோம். அதற்குப்பதிலாக அம்முறைகளைப் பற்றி அன்னை என்ன கூறியுள்ளார்என அறிந்து அவற்றைப் பின்பற்றுதல் சாலச்சிறந்தது.
- ❀ நமக்கு தர்மபுத்திரன், சிவனடியார்கள், ஆழ்வார்கள், சரித்திரத் தலைவர்கள், காந்தி, நேரு போன்றவர்கள் செய்தவை அடிக்கடி வழிகாட்டும்.

**அதற்குப்பதிலாக அன்னை வழிகாட்ட வேண்டும்.**

- ❀ முறை முழுமை பெறும்பொழுது பலன் முழுமை பெறும்.

பலன் முழுமை பெறும்பொழுது பக்குவம் வரும்.

பக்குவம் வாராமல் பவித்திரம் வாராது.

முறையும், பலனும், முழுமையும், பக்குவமும், பவித்திரமும் நம்மால் இதுவரை செய்ய முடியாதவற்றைச் செய்யும்.

**அதைக் கடந்தது அன்னை. அன்னை மட்டும் அனைத்துமாகும்.**

### 66. சக்தி, வீர்யம், தெய்வப் பிரகிருதியைக் கடந்த சிரத்தையை நாடு.

ஆர்வமாகச் செயல்படுவது சக்தி செயல்படுவது.

தீவிரமாக முழுமூச்சுடன் செயல்படுவது வீரியம்.

மனித சக்தியை தெய்வ சக்தியாக்குவது தெய்வப் பிரகிருதி.

**நம்பிக்கை இவற்றைக் கடந்தது.**



எலக்ஷனில் பிறருக்காக வேலை செய்யாமல் ஆர்வமாகச் செயல்படுவது முதல் நிலை.

தீவிரமாக எலக்ஷனில் வேலை செய்பவன் தன்னால் முடிந்த எதையும் பாக்கி வைக்காமல் செய்பவன்.

சக்தியும், வீரியமும் நம்திறமை.

அவற்றைச் சமர்ப்பணம் செய்தால் சக்தி தெய்வ சக்தியாகும்; வீரியம் தெய்வீக வீரியமாகும்.

நமது சக்தியும், வீரியமும் சமர்ப்பணத்தால் தெய்வத்தன்மையைப் பெறுகின்றன.

நம்பிக்கை எனில் இவற்றுள் உள்ள நம் பங்கை விலக்கி முழுவதும் தெய்வ சக்தி, தெய்வீக வீரியமாவது.

ஆபத்தான வியாதி வந்தவுடன் ஆஸ்பத்திரிக்குப் போகிறோம்.

டாக்டர் ஆபத்தை விலக்குகிறார்; மருந்து தருகிறார்; நம்மால் செலவு செய்ய முடியும்என நம்பி செயல்படுவது நம்முடைய சக்தி, டாக்டருடைய சக்தி.

அது பலிக்கவில்லை. உள்ளூர் ஸ்பெஷலிஸ்ட், சென்னை, டெல்லி ஸ்பெஷலிஸ்ட் முயல்வது வீரியம் செயல்படுவது.

அவர்கள் செயல்படும்பொழுது சமர்ப்பணத்தை நம்புவது.

எதுவும் பலிக்கவில்லையெனில் நமது சக்தியிலும், வீரியத்திலும், சமர்ப்பணத்திலும் நம்பிக்கை போகிறது. நடப்பது நடக்கட்டும்என விட்டுவிடுகிறோம்.

**நடப்பது நடக்கட்டும்என விரக்தியாக விடுவதற்குப்பதிலாக, நமது சக்தி, நம் வீரியம், நம் சமர்ப்பணம் உள்பட நாம் கலந்திருப்பதால் 'நாம்' தொந்தரவு மட்டும் தரமுடியும். இனி இவற்றில் நம்பிக்கை போய்விட்ட–தால் pure faith, தூய நம்பிக்கை செயல்படும்என நம்புவது Faith.**

இப்படி வாங்கிய பேனா 30 வருஷம் வருவதுடன், அதனால் எழுதிய எதுவும் வெற்றிபெறத் தவறுவதில்லைஎனக் காணலாம்.

பேயான மனைவி, கணவனையுடையவர் past consecration, கடந்தகாலச் சமர்ப்பணத்தால் நம் சக்தி, நம் வீரியம், நமது சமர்ப்பணத்தை withdraw

வாபஸ் செய்தால் கணவன் கந்தர்வனாவான், மனைவி பஞ்சகன்னிகை-களில் ஒருவராவாள்.

செய்வது ஞானத்தை சித்தியாக்கும்.

செய்ய ஏராளம் உண்டு.

பேசுவதை நிறுத்தி, செய்ய ஆரம்பிப்பது சரி.

**67. Life Responseஐ மதித்து நட.**

நாம் சகுனம் என்று கூறுவது Life Response வாழ்வின் எதிரொலியில் ஒரு பகுதி.

வாழ்க்கையில் நடக்கும் அத்தனை நிகழ்ச்சிகள், உத்தியோகம், course, திருமணம், கூட்டாளி, டெக்னாலஜி போன்றவை, இந்த ஞானம் உள்ளவர்க்கு Life Response வாழ்வை நிர்ணயிக்கக்கூடியவை.

நமக்கு முழுவெற்றி கிடைத்தவற்றில் 1 வருஷம், 1 மாதம், 10 வருஷம் முன்னால் யோசனை செய்துபார்த்தால் **வாழ்க்கைத் தெளிவாகச் சுட்டிக்காட்டியது தெரியும்**.

போட்டோவிலிருந்து ஒருவர் தலையை வெட்டி எடுத்தனர். இது சிறுபிள்ளை குறும்பு. 4, 5 வருஷம் கழித்து அவரிறந்தபொழுது போட்டோ நிகழ்ச்சியை பலரும் உணர்ந்தனர்.

ஓர் IAS ஆபீசர் தகப்பனாருடன் கோபித்துக்கொண்டு தம் initialஐப் போட மறுத்தார்.

நண்பரையும், அவர் நட்பையும் போற்றி அதற்கடையாளமாக அவரிட-மிருந்து ஒரு புத்தகம் பெற்றபொழுது அவர் பெயர் அதிலிருந்து கத்தரித்து எடுக்கப்பட்டது கண்டு வருத்தமடைந்தார்.

பிற்காலத்தில் அந்தப் பெயரே கசக்கும் நிலை வாழ்க்கை எழுப்பியது.

கெட்ட நடத்தையைக் குறிக்கும் செயல்கள் பல உள.

நீ மணக்க இருக்கும் இளைஞனுக்கு அது போன்ற பழக்கம் உள்ளது உன் கண்ணில் படவில்லை என்றபொழுது, வாழ்க்கை அடுத்தவர்மூலம் எடுத்துக்காட்டுகிறது. ஏற்பதால் என்ன நடந்தது, மறுத்ததால் விளைவு என்னஎன்பதை பிற்காலம் குறிக்கும்.



இங்கிலாந்தில் 1900, 1800இல் 'இவள் கர்ப்பமாக இருக்கிறாள்' என ஆண்கள் பெண்களோடு பேசமாட்டார்கள். குறிப்பாகவே பேசுவார்கள். நம் நாட்டில் ஒரு பண்பாடு; மனிதன் சொற்கள், பேச்சில், எழுத்தில் வெளிவருபவை அவர் மனநிலையைக் காட்டும். நேரடியாக அது வெளிப்பட்டு மனம் அருவெறுப்புப்பட்டபின் அவரை மணக்க விரும்பினால், அம்முடிவின் பலனை அனுபவிப்பதில் ஆச்சரியமில்லை.

இதுவரை நாம் செய்த காரியங்களும், அவற்றின்வழி நாம் பெற்ற பலன்களும் நம் மனத்தில் பதிவாகியுள்ளன.

**வாழ்வுக்கு அது பெரிய ஜாதகம்.**

உடன் உறைபவர், உயிரின் பகுதியானவர் உயிரை எடுக்கப்போகிறார் என்பது பல ஆண்டுகள்முன் தெரியும்.

காதற்ற ஊசி காலத்திற்கும் உயிரைக் காப்பாற்றப்போகிறது என்பதை பழைய நிகழ்ச்சிகளினின்று காணலாம்.

பெரிய மனிதர்கள் வரலாறு, புகழ்பெற்ற கதைகளில் இந்த ஞானம் மண்டியிருப்பதையும், விரவியுள்ளதையும் காணலாம்.

1 மாதம் நம் வாழ்வைக் கவனித்தால் இத்தனை ரகஸ்யங்களும் வெளிவரும்.

அறிவது எளிது; பின்பற்றுவது எளிதன்று.

மனம் வேண்டாததை ஆர்வமாக விழையும்.

Life Response பெரிய ஞானம்.

**68. தவறு என்று தெரிந்ததைச் செய்யும் ஆர்வம் கூடாது.**

தவறு என்று தெரியாதது வழக்கம்.

**முக்கியமான விஷயத்தில் தெரிந்தவற்றை விரும்பிச் செய்வதுண்டு.**

திரும்பத் திரும்பவும் செய்வதுண்டு.

கடைசி காலம்வரை செய்வதுண்டு.

கறுப்புப்பணத்தைக் கையாலும் தொட மறுப்பவர், வெள்ளைப்பணத்தை கறுப்புப்பணமாக மாற்றுகிறார். காரணம் அவசரம்.

**சிறிய விஷயத்தில் அவசரம், பெரிய விஷயத்தில் ஆபத்தைக் கொண்டு வரும்**.

அவசரம், சில்லறை ஆசை, பெருமை, ஆடம்பரம் ஆகியவை தவறு எனத் தெரிந்தாலும், மீண்டும் செய்யத் தூண்டுவது.

**தூண்டுவது தவறன்று; குணம்.**

பிறர் இதே விஷயத்தில் அவரை யோசனை கேட்டால், வேண்டாம் என்பார்.

தனக்கு என்றபொழுது தவறாது செய்வார்.

இதற்கு வழியுண்டா?

இதுபோன்ற விஷயத்தில் நாம் பிறருக்குக் கட்டுப்படுதல் இதைத் தடுக்கும்.

நமக்கு முக்கியமான ஒருவரைக் குறிப்பிட்டு இந்த மாதிரி விஷயங்களில் அவர் பேச்சுக்குக் கட்டுப்பட வேண்டும்என்றால் இத்தவறு தடுக்கப்படும்.

**அன்னைக்குக் கட்டுப்படுவது சமர்ப்பணம்.**

சமர்ப்பணம் செய்தால் காரியம் தவறாது.

சமர்ப்பணத்திற்குக் கட்டுப்படுவது சிறப்பு.

மனிதருக்குக் கட்டுப்படுவது அடுத்தது.

பொறுப்பற்றவர், பிறரை ஏமாற்ற முயல்பவர், வேலையைத் தட்டிக் கழிப்பவர், வேண்டுமென்று தவற்றை நாடுபவர் போன்றவர் இதற்கு விலக்கு.

தன்னைக் கட்டுப்படுத்த முடியாதவருக்கு வழியுண்டு.

தான் கட்டுப்படக்கூடாதுஎன்பவர் அவரிஷ்டப்படி நடக்கிறார்.

பிறருக்கு யோசனை சொல்லக்கூடாது, கேட்டால்தான் சொல்லலாம் என்பது இதன் சாரம்.

சுயநலமிக்குத் தவறுஎன்று தெரிந்தாலும், அதையும்மீறி இலாபம் வரும் என்ற கற்பனையுண்டு.

திருடன் அகப்படமாட்டான்என்றுதான் திருடப்போகிறான்.

20 கோடி இலஞ்சம் பெற்றதை சர்க்கார் எடுத்துக்கொண்டது. 2000



கோடி சம்பாதித்தார்எனில் அவர் இலஞ்சத்தின்மூலம் முன்னேறக்கூடிய ஆத்மாவாகும்.

அவர் சட்டம் மற்றவர்க்குதவாது.

செய்வனவெல்லாம் தில்லுமுல்லு, பொய், அழிச்சாட்டியம், இருந்தும் வெற்றி வருகிறதுஎனில் அது அவர் ஆத்மநிலை.

நமக்கு அவர் நிலை வழிகாட்டியாக இருக்காது.

## 69. கடந்ததில் ஒரு தவற்றிலிருந்தாவது விலகு.

நமக்குத் தெரிந்த தவறுகள் ஏராளம்.

அவற்றுள் ஒன்றை எடுத்து யோசனை செய்து, இந்தத் தவற்றை இனி செய்யக்கூடாதுஎன முடிவு செய்வது இம்முறை.

**எல்லாத் தவறுகளையும் விலக்க வேண்டும். ஒன்றை விலக்கினாலும் அதற்குரிய பலன் தெரியும்**.

Small Scale Industries பெரிய கம்பனிக்கு சப்ளை செய்தால், பெரிய கம்பனி மாமியார்போலப் பழகும்.

1975இல் 11 இலட்ச ரூபாய்க்குத் தொழிலைச் செய்பவர் அப்படிப்பட்ட நிலையிலிருந்தார்.

34 npக்கு செய்யும் partஐ பெரிய கம்பனி 35 npக்கு வாங்குகிறது. அது மட்டுமன்று, ஆர்டரை எப்பொழுது நினைத்தாலும் இரத்து செய்யும்.

SSIக்கு வரவேண்டிய இலாபம் பெரிய கம்பனிக்குப் போகும்.

போட்டி ஏராளமாக இருப்பதால் SSI செய்வதற்கு ஒன்றுமில்லை.

SSI முதலாளிக்கு அன்னை பரிச்சியமானார்; ஆனால் நம்பிக்கையில்லை.

தரமான சரக்கு என்பதால் பெரிய கம்பனிக்கு அடிமையாக ஊழியம் செய்வது தவறுஎன எடுத்துக் கூறியதை முதலாளி ஏற்றார்.

சொந்தமாக ஒரு சரக்கு product செய்தால், அதை மார்க்கட் ஏற்றுக் கொண்டால், 34 npக்கு அடக்கமானால், 50 npக்கு விற்கலாம், 100 npக்கும் மார்க்கட் ஏற்றுக்கொள்ளும்என்பது விளங்கியது.

புது product செய்தார். தரமான இலாபம் வைத்து விற்றார். கம்பனி 11 இலட்ச வியாபாரம் 50 இலட்சமாயிற்று. இது 3 வருஷத்தில் கிடைத்தது.

இது தொழிலில் செய்த தவறு.

இதுவே அறிவால் செய்த தவறானால் பலன் அதிகம்.

உணர்வின் தவறு மாறினால் மேலும் பலன் வரும்.

தவற்றிலிருந்து விலகுவதைவிட நல்லதைக் கண்டு சேர்த்துக்கொள்ள வேண்டும்.

**எதைச் செய்தாலும் மனம் ஈடுபட்டு முழுமையாகச் செய்தால் வரவேண்டிய முழுப்பலன், முடிவில் வருவதற்குப்பதிலாக முதலிலேயே வரும்.**

வாழ்க்கை கடல் போன்றது.

எதைச் செய்தாலும் பலன் உண்டு.

தவற்றை விலக்குவது ஒரு முறை.

நல்லதைச் சேர்ப்பது அடுத்த முறை.

புதியதைக் கண்டுபிடிப்பது நல்ல முறை.

அன்னையை நினைத்துச் செயல்படுவது அருள் முறை.

வாழ்வைப் போற்றுவது வளம் பெறும் வழி.

*தொடரும்....*

❀❀❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

அருளால் நடந்ததைக் காரணத்தால் விளக்கினால் அருள் விலகும். எண்ணத்தைச் சமர்ப்பணம் செய்ய (rationalisation) காரணம் கற்பிப்பது தடை.

***காரணம் கற்பிப்பது சமர்ப்பணத்திற்கு தடை.***

Printed by Mrs. Anuradha Sriram, Integra, No.51, II Cross, Jawahar Nagar, Nellithope Post, Puducherry-5 and Published by Mr. P.V. Balakrishnan, 12, First Cross, Venkata Nagar, Puducherry-11 on behalf of The Mother's Service Society, Puducherry-11.
Editor: N. Asokan

# வரி வடிவம்

The Secret இரகஸ்யம் என்றொரு புத்தகம் வெளிவந்து 60 இலட்சம் பிரதிகள் விற்றுள்ளது. பரம்பரையாக தெய்வ நம்பிக்கையுள்ளவர்கள் செய்யும் பிரார்த்தனை முறைகளைப் பின்பற்றிப் பலன் பெறும் வழியிது. இன்று பிரபலமாக உலகம் ஏற்கிறது. அவற்றுள் ஒன்று வரி வடிவம். நினைவைச் சொல்லாக மாற்றி, எழுதினால் எழுத்துக்கு சக்தி வரும் என்பது முறை. The Secret சொல்லும் பல முறைகளில் இதுவும் ஒன்று. கம்பனி அக்கௌண்டண்டாக வேலை செய்பவர் வீடு வாங்க முயன்றார். அது 15 இலட்சம். பெற்றோருக்கும் வாங்குவது முதற்கடமை. அதனால் 30 இலட்சம் தொகை தேவை. அதற்குரிய வழி தெரியவில்லையென மனைவியிடம் கூறினார். மனைவி தாம் சமீபத்தில் கேட்டறிந்த முறையைக் கூறினார். கணவர், 'எனக்கு அதிலெல்லாம் நம்பிக்கை இல்லை' என்றார். மனைவி ஒரு செக்கில் அத்தொகையை எழுதி அன்னை முன் வைக்க நினைத்தார். ஏனோ செக்கை எதுவும் எழுதாமல் அன்னை முன் வைத்தார். மனம் அன்னையை உருவமாக செக்கில் கண்டது. பணம் தானே புறப்பட்டு வந்துவிட்டது. கணவரை கம்பனியில் ஒரு extra work அதிகப்படியான வேலையைச் செய்யக் கேட்டனர். செய்தால் அதற்குரிய பணம் தருவதாகக் கூறினர். 3 ஏக்கர் நிலம் வாங்கி, ரெஸ்டாரண்ட் கட்ட பிளானும், நிலமும் பெறுவது கணவர் கடமை. 3 மாதத்தில் அது நிறைவேறியது. 'கம்பனி கமிஷனாக 37 இலட்ச ரூபாய் கொடுத்தது' என கணவன், மனைவிக்குப் பணம் வந்த வழியை விளக்கினார்.

✡ **பிரார்த்தனை பலிக்கும்.**

✡ **வரி வடிவம் சிறப்பாகப் பலிக்கும்.**

❀❀❀

# ஹாவாய்

ஹாவாய் என்பது ஒரு தீவு. அமெரிக்க மாநிலங்களில் ஒன்று. அங்கு ஒரு பைத்தியக்கார ஆஸ்பத்திரி. வேலை செய்பவரைப் பைத்தியங்கள் திட்டும், அடிக்கும். இது வழக்கம். ஓர் அமெரிக்க டாக்டர் இங்கு வேலை செய்தார். அவர் நோயாளிகளை மருத்துவ முறைப்படி சிகிச்சை செய்யவில்லை. அவனுடைய file கோப்பை எடுத்து வைத்துக்கொள்வார். அதைப் படிப்பார். "என் பிரியத்தை நான் இந்நோயாளிக்கு அனுப்புகிறேன்" என பலமுறை கூறுவார்.

✡ **நோயாளிகளின் கடுமை குறைந்தது.**

✡ **சிலர் குணமாயினர்.**

✡ **பலர் பூரண குணம் பெற்று வீடு திரும்பினர்.**

**இது ஹாவாய் தீவில் பரம்பரையான பழக்கமான முறை.**

✡ **மனம் கருணையால் நிறைந்தால் அதைப் பிறருக்குத் தர முடியும்.**

**அது தானே அவரைப் போயடையும்.**

1914ஆம் ஆண்டு மார்ச் 29ஆம் தேதி அன்னை பகவானை சந்தித்தார். அடுத்த நாள் "உலகம் இருளில் மூழ்கியிருப்பது பெரிதன்று. நேற்று நான் கண்ட மஹானிருக்கும்வரை இறைவன் திருவுள்ளம் இவ்வுலகில் நிறைவேறும்'' என தம் டைரியில் எழுதினார்.

**உள்ளத்து உண்மையை உலகம் ஏற்று உய்யும் தூய்மை தெய்வம்.**

❀❀❀